# தென்னகத் தலைவன்

ஆசிரியர் : தினகரன்


தம்பி--உன்னைத்தான்! ஆகஸ்டில் அழைப்பு வரும்--
கடுமையான சோதனைக்குத் தயாராயிரு!



## காளை மாட்டில் பால் கறக்கச் சென்ற கம்யூனிஸ்டுகளின்

# தோலை உரித்துத் தொங்கப் போட்டனர்!

# அடிபட்டு ஓடுகின்ற காளை மாடு

# அறுபத்தி ஏழிலும் திரும்பாது நாடு!



திராவிட முன்னேற்றக் கழகம் தன்னை எதிர்த்தவர்கள் அத்தனை பேர்களையும் திருவண்ணாமலை இடைத் தேர்தலில் வீழ்த்தி விட்டது. கதிரவன் வென்றான்—காளைகள் பள்ளத்திலே விழுந்து விட்டன.

செயல் வீரர் ப.உ. சண்முகம் அவர்களை முறியடிக்க போலீஸ் மந்திரியும், அவருடைய படை வரிசையும் துடித்து நின்றனர். இவர்களுக்குத்துணையாக கழுத்தறுப்புக் கட்சியினர், குட்டிக் கட்சித் தலைவர், குடிமகன், 'குரங்கு நடிகன்' சவஞானம்-அவருக்குப் பின்னாலேயிருக்கும் நடைப்பிணங்கள், பெரியார்-அவருடைய ஏவலுக்கு அடங்கும் சில எடுபிடிகள் எல்லோரும் முன்னின்றனர்! முதுகெலும்பு ஒடிந்தவர்களும் முட்டுக்கால் கட்சியினரும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியாமல் காங்கிரசுக்குக் கொடி தூக்கினர்.

நாங்குனேரியிலும், போடியிலும் வெற்றி பெற்ற திமிரை ஒவ்வொரு இடத்திலும் சொல்லி அப்போதே முடிவெடுத்தார்கள் திருவண்ணாமலையிலும் சர்க்காருக்குத்தான் வெற்றி என்று! ராஜாத்தியிலிருந்து ரத்தவெறியர்கள் வரை—ஆடல்நாயகிகளிலிருந்து ஆயுட் கைதிகள் முடிய எல்லோரும் முன்னேற்றக் கழகத்தை ஒழிப்பதற்கே இந்த இடைத் தேர்தல் ஒன்றுதான் கருவியென்றார்கள்! தேர்தல் கதாநாயகர் காமராசர் தன்னுடைய தகுதியைக் குறைத்துக் கொண்டு எல்லாக்கட்சியினரும் தனக்கு எடுபிடிகளாக இருப்பது கழகத்தின் தோல்விக்கு அறிகுறியென்று எண்ணினார்.

செத்துவிட்ட எம். எல். ஏ. யின் இழந்துவிட்ட இடத்தைப் பெற்றுக்கொள்ள தமிழகத்து சர்க்கார் தன் எல்லாச் சாதனங்களையும் பயன்படுத்திக் கொண்டது தமிழகத்தின் பெருமைகளுக்குப் பங்கம் தேடித் தங்களை உயர்த்திக் கொள்ளும் மமதையாளர்களுக்குப் பாடம் புகட்ட முன்னேற்றக் கழகம் முரசொலித்தது.

தொகுதி மக்களின் பெரும்பான்மைத் தீர்ப்பு போலீஸ் மந்திரியின் மிரட்டலைத் தூக்கி யெறிந்தது. இந்த இருமுகாமுக்கிடையே புகுந்து ஒரு மாதகாலம் தங்களதுஅரசியல் வெறியைத் தணித்துக்கொண்ட கொலைகாரர்களும், சில கொள்ளைக்காரர்களும் சர்க்காரைக் காப்பாற்ற முயன்று தோற்றுவிட்டனர். அந்த இழிசெயல்களைத் தொகுத்துப் பார்த்தால் அவர் தம் அழுகல் குணம் தெரியும்.

மக்களின்தேவைகளை நிறைவு செய்யாத சர்க்கார், தான் பெறும் வெற்றிகள் மக்கள் தரும் ஆதரவு வாயிலாக தங்கள் கொள்கைகளுக்கே வெற்றி என்கிறார்கள். பொற்கொல்லர்களைக் கொன்றுவிட்ட கொள்கைச் சட்டத்திற்கு மாபெரும் வெற்றியென்று பட்டை நாம மந்திரி பல முறை பேசிவிட்டிருக்கிறார்.

மூன்றாவதாக வந்த திருவண்ணாமலைத் தேர்தலில் அதிகார வெறியர்களுக்குப் புத்தி புகட்டும் கடமையைக் கழகம் எடுத்துக்கொண்டு பணியாற்றியது.


கண்ணியம் புகழைப் பெற்றது. அந்தத் தொகுதியில் உறவும் உறுதியுற்ற உதிரிக் கட்சினர் உரக்கக் கூச்சல் போட்டால் சர்க்காரைக் காப்பாற்றலாம் என்றனர். கடைசியில் யாரும் யாரையும் காக்க முடியாமல் கதறியழுகின்றனர்! பொதுமக்கள் எல்லா வகையானசதிகளையும் சாகடித்துக் கழகத்திற்கு வெற்றி தந்தனர்!

தமிழ்நாட்டுத் தேர்தல் வில்லன் என்று பட்டம் பெற்றவருக்குத் திருச்செங்கோடு மிகப் பெரிய வீழ்ச்சியைக் காட்டியது-திருவண்ணாமலை மீண்டும் ஆர்ப்பாட்டங்களுக்கும் காலிதனத்திற்கும், அறிஞர் அண்ணா சொன்னதுபோல் சாவு மணியடித்திருக்கிறது. இப்படித் தான் முடிவு எடுத்த முன்னரே நாம் சொன்னோம். நாவலரும் கலைஞரும் கணக்கிட்டுசொன்ன உண்மைகளைக் கபோதிபுரவாசிகள் காண மறுத்தனர். ஈரோட்டுப் பையனைப் போன்ற சிலர் காங்கிரசின் புதிய பங்காளிகளாகப் புகுந்து திரிந்தனர்! காளை மாடுகளுக்கு ஓட்டுக் கேட்ட அவர்கள் கழகத் திருக்கூட்டத்தை விரட்டி அடிக்கத் தாவிக் குதித்தனர்! நேருவின் கரத்தை வலுப்படுத்தக் காங்கிரசை ஆதரியுங்கள் என்றும் போதைக்குரலிலே பலர் கூச்சலிட்டனர்! பொதுமக்களின் நல்ல தீர்ப்பைப் பார்த்த பிறகு வழி தெரியாதவர்களுக்காக வருந்துகிறார்களாம்!

கழகத்திற்கு வாக்களித்தவர்கள் வழி தெரியாதவர்களா? விதியற்றவர்களாகச் சொந்த வழியைவிட்டு மாடுகளின் வாலைப்பிடித்துத் தொங்கியவர்களா என்பதை இன்னும்அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. எவ்வளவுஅட்டகாசங்களுக்குப் பிறகு இந்த அடிபட்டார்கள் என்பதை ஒரு வினாடி எண்ணட்டும்!

காளை மாடுகளிடத்தில்கூட பால் குடிக்க வந்தவர்கள் தமிழ்நாட்டுக் கழுத்தறுப்புக் கட்சியினர். அவர்கள் போட்டியிட்டால் எவ்வளவு அதிகமாக வேலை செய்வார்களோ அதைப்போல பல மடங்கு வேகமாக உழைத்தார்கள். செயற்குழு தனியாக அறிக்கை வெளியிட்டு காங்கிரசைக் காப்பற்றவும், கழகத்தை

(8-ம் பக்கம் பார்க்க)



**சபாஷ்!**
**ம. பொ. சி. அவர்களே!**
**நஞ்சுண்ணும்**
**போராட்டம்**
**எப்போது?**

"...மாற்றுக் கட்சிக்கு விஷம் தரும் ஒரு அரசியல் கட்சி இந்த மாபெரும் உலகிலேயே தி. மு. க. வாகத் தான் இருக்க முடியும்!...தமிழரசுக் கழகத்திற்கு விஷம் தர விரும்புகிறார் 'மு, க. அவசியமேற்பட்டால் தேசிய ஒருமைப்பாட்டிற்காக நஞ்சுண்ணவும் தயங்கமாட்டார்கள் தமிழரசுக் கழகத்தார்கள்..."

—"செங்கோல்"
*7-7-63*

ம. பொ. சி. அவர்களே! திருண்ணாமலையில் நீங்கள் காங்கிரசிற்குக் கொடுத்த தார்மீக ஆதரவு தோல்வியடைந்ததை முன்னிட்டு தமிழரசுக் கழகத்தாருக்கு எங்கள் கலைஞர் ஒரு துளி விஷம் கொடுத்தார். அது உங்களுக்குப் பெரிய வேதனையைத் தந்திருக்கிறது! அதற்கு நாங்கள் வருந்துகிறோம்.

'தேசிய ஒருமைப்பாட்டிற்காக தமிழரசுக் கழகத்தினர் நஞ்சுண்ணவும் தயார்' என்று எழுதியிருக்கிறீர்கள்.

பிரிவினைக் கொள்கைக்கு ஆதரவு பெருகிக் கொண்டே வருகிறது. திருவண்ணாமலை வெற்றி அதைத் தான் காட்டுகிறது. தி. மு. கழகத்தின் ஒவ்வொரு அங்குல வளர்ச்சியும் உங்கள் அகராதிப்படி தேசிய ஒருமைப் பாட்டுக்கு ஆபத்தானதுதான். இதை உங்களால் எந்தக் காலத்திலும் தடுக்கவே முடியாது. ஆகையால்—எங்கள் கலைஞர் கொடுக்கும் விஷத்தை நீங்கள் குடிக்க வேண்டாம். ஆனால் முடியாத அந்த தேசிய ஒருமைப் பாட்டைக் காப்பதற்காக உங்கள் தோழர்களுக்கு நீங்கள் சொல்லியுள்ளபடி எப்போது நஞ்சு கொடுக்கப் போகிறீர்கள்.

நீங்கள் நாணயமானவர்—சொன்ன சொல் தவறாதவர்—சொன்னால் அதன்படி நடப்பவர் எங்களுக்குத் தெரியும்—ஆகையால் தேசிய ஒருமைப்பாட்டிற்காக தமிழரசுக் கழகத்தார் எப்பொழுது நஞ்சுண்ணப் போகிறார்கள்—அதைச் சொல்லிவிடுங்கள். அந்தச் சோகச் செய்தியைத் தாங்கிக்கொள்ள நாங்கள் தமிழகத்தை இப்பொழுதே தயார்ப்படுத்தி வைக்கிறோம்.




மலர் 1 | 14-7-63 | இதழ் 35

# சஞ்சீவி ரெட்டியின் உள்ளக் குமுறல்!

காவிரியும்—கொள்ளிடமும் கரைபுரண்டோடும் திருச்சித் திருநகரில் சமீபத்தில் இருபெரும் விபத்துக்கள் நடைபெற்றிருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருக்கிறது.

ஒன்று! கொள்ளிடம் மேல்ப் பாலத்திலிருந்து லாரி ஒன்று தலைகீழாக விழுந்ததால் நால்வர் உயிரிழந்தார்கள்—நால்வர் படுகாய முற்றனர் என்ற செய்தி.

மற்ருென்று அதைவிட ஆபத்து நிறைந்த சேதியாகும்!

டெல்லி வட்டாரத்தைக் கலக்க வைக்கும் அந்தச் சம்பவம் திருச்சித் திருவெறும்பூரில் தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளித் திறப்பு விழாவில் நடைபெற்றிருக்கிறது.

விபத்திற்குக் காரணமாக இருந்த பிரச்சினை—"தேசிய உணர்ச்சியா? மாநில உணர்ச்சியா? எது முக்கியம்? வடநாட்டவருக்குத் தென்னுட்டில் முதலிடம் ஏன்?" என்பதாகும்.

இப்படி ஒரு உணர்ச்சி கொப்பளிக்கத் தக்க கேள்வியைத் தூக்கிப் போட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் அல்லர்.

"வட நாட்டவருக்குத் தென்னுட்டில் முதலிடம் ஏன்"—என்று கேட்டவர் தி. மு. க. வும் அல்ல! சாதாரண மனிதரும் அல்ல! சரியான காங்கிரஸ்காரர்! தமிழ் நாட்டவருக்கு நன்கு அறிமுகமானவர்—காமராசருக்கு நெருங்கிய நண்பர்—அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தவர்—டெல்லி வட்டாரத்தில் செல்வாக்குள்ளவர்—பண்டிதருக்கு மெத்தப் பிடித்தமானவர்—இன்று ஆந்திர மாநிலத்தின் முதலமைச்சராக வீற்றிருப்பவர்—பெயர் சஞ்சீவி ரெட்டி!

"வடவருக்குச் சலுகை ஏன்?"—என்று அவரா பேசினுர்? என யாரும் மயக்கமோ கலக்கமோ அடைய வேண்டாம். அவர் தான் பேசினுர்!

திருச்சியிலுள்ள திருவெறும்பூர் தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளித் திறப்பு விழாவில் தமிழக முதலமைச்சர் காமராசர், டெல்லி மந்திரி சுப்பிரமணியம், ஆந்திர முதன் மந்திரி சஞ்சீவி ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அவ்விழாவில் பேசும்பொழுது சுப்பிரமணியம் குறிப்பிட்டார்—"சில மாநிலங்கள் தங்கள் பகுதியில் அமைந்துள்ள சர்க்கார் துறைத் தொழில்கள் தங்களுக்கே உரியவை என்றும், அவற்றில் தங்கள் மாநில மக்களே வேலை வாய்ப்புப் பெற வேண்டும் என்றும் கருதுகின்றன. தேசியத் திட்டங்களில் எந்த மாநிலத்தவராயினும் வேலை பெற உரிமை உண்டு"—என்று விரிந்த மனப்பாங்குடன் உபதேசம் செய்தார்.

கவைக்குதவாத இந்த உபதேசம் யாராவது ஒரு தி. மு. கழகத் தோழரின் இதயத்தில் கனலை மூட்டியிருக்க வேண்டும்—மாருக சஞ்சீவி ரெட்டியாரின் உள்ளத்தில் தீப்பொறியைக் கிளப்பியிருக்கிறது.

"தொழிற்சாலையில்—வேலை வாய்ப்பு அளிப்பதில் மாநிலவாரியாக முக்கியத்துவம் அளிப்பது என்பது இயலாது. தொழிற்சாலை அமையும் மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கே அங்கு வேலை வாய்ப்பு அளிப்பதில் முக்கியத்துவம் அளிக்கவேண்டும். ஆந்திர மாநிலத்தில் நிறுவப்பட்ட ஒரு தொழிற்சாலையில் வடநாட்டுக்காரர்கள் ரோளமான பேருக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. அதனுல் பல இடையூறுகள் விளைந்தன. எனவே இதில் எல்லாம் தேசிய நோக்கு அவ்வளவாகப் பயன்டாது."

அடுத்துப் பேசிய சஞ்சீவி ரெட்டி மேற்கண்டவாறு ஆவேசத்துடன் பேசியிருக்கிருர்.

தமிழர், தெலுங்கர், மலையாளி, கன்னடியர், வடவர் இப்படிப் பிரித்துப் பிரித்து பேசுவது குறுகிய மனப்பாங்குடையவர்களின் கோணல் வழிப் பேச்சாகும். நாமெல்லோரும் பாரத மாதாவின் ஒரே புதல்வர்கள்—சுதந்திர இந்தியர்கள் இதில் பேதம் கூடாது என்று தேசியக் கொடியின் கீழ் நின்று கீதம் இசைக்கும் குழுவைச் சார்ந்த சஞ்சீவி ரெட்டியார்தான் வடநாட்டுக்காரர்களுக்குத் தென்னுட்டில் வேலை வாய்ப்பு அளிக்கக் கூடாது என்று இனம் பிரித்துப் பேசுகிருர்!

எப்படி ஏற்பட்டது சஞ்சீவியாருக்கு இந்தத் திடீர் ஞானோதயம்!

ஆந்திர மாநிலத்தில் நிறுவப்பட்ட ஒரு தொழிற்சாலையில் வடநாட்டுக்காரர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்ததின் மூலம் பல இடையூறுகள் விளைந்தனவாம்!

என்ன இடையூறுகள்? அதை தெளிவாக்கவில்லை சஞ்சீவியார்!

அவர்களே ஆதிக்கம் செலுத்த எண்ணினுர்களா? பெரிய பதவிகளை எல்லாம் வடவர்களே ஆக்கிரமித்துக்கொண்டார்களா? அவர்கள் செய்யும் தவறுகளையெல்லாம் தட்டிக் கேட்க முடியாதபடி டெல்லி அரசு குறுக்குச் சுவராக நின்றதா? அப்படி என்ன இடையூறுகள்? அதுவும் சஞ்சீவியாரே மிரண்டு, வடவர் உறவு வேண்டவே வேண்டாம் என்று ஓங்கிப் பேசும் அளவுக்கு!

"இதில் எல்லாம் தேசிய நோக்கு அவ்வளவாகப் பயன் படாது" அழுத்தமாகச் சொல்கிருர் ஆந்திரத்தின் முதலமைச்சர்!

இதிலிருந்து என்ன தெரிகிறது. தேசிய ஒருமைப்பாடு—தேசிய ஒருமைப்பாடு என்பதெல்லாம் போலி நாடகம்—கேலிக் கூத்து—வலிவிழந்து போனவர்களின் வாய்ப்பாட்டு என்பதைத் தானே சஞ்சீவி ரெட்டியாரின் பேச்சு கணீர் கணீர் என்று ஒலிக்கிறது.

சொந்த மாநில வளர்ச்சி—சொந்த மாநில மக்களுக்கு வேலை வாய்ப்பு—சொந்த மாநில முன்னேற்றம் இந்த எண்ணம் தலை தூக்குகிற பொழுது—ஏக பாரதம், ஏக இந்தியா, தேசிய ஒருமைப்பாடு இந்த 'பஜனை' மூட்டை கட்டி வைக்கப்படுகிறது. வடவரை நுழைக்காதே என்று கழகத்துக்காரனை விடக் கருராகப் பேசுகிருர்—அதுவும் பொது மேடையில்.

டெல்லி அரசின் ஆதிக்க மனப்பான்மையைத் தெள்ளத் தெளிய உணர்ந்தவர் சஞ்சீவியார். அவர் இதயம் அடிக்கடி குமுறி இப்படி எதையாவது வெடித்துக் கொண்டிருக்கும். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு சென்னை நகரக் கூட்டம் ஒன்றில் பேசும் பொழுது தி. மு. கழகத்தின் செயலைப் பாராட்டி—"தென் மாநிலங்கள் ஒன்ருக இணைந்து கடுமையான குரல் எழுப்பினுல் டெல்லி அரசு பணிந்துவிடும்"—என்று அவர் இதயக்குமுறலை வெளிப்படுத்தினுர்.

அதன் எதிரொலி அவர் டெல்லிக்கு அழைக்கப்பட்டார். அவர் தலைக்கு ஒரு குல்லாயும்—வாய்க்கு ஒரு பூட்டையும் மாட்டி அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராக அவரைத் தூக்கிப் போட்டார்கள். சஞ்சீவியாரின் சத்தம் அதோடு அடங்கியது.

எந்த மாநிலத்துப் பெருந் தலையாவது — வடக்கு—தெற்கு என்று பேச ஆரம்பித்தால், அவருக்கு டெல்லியிலே ஒரு பதவியைக் கொடுத்து அவர் வாயைக் கட்டிப்போட்டுவிடும் தந்திரக் கலையை டெல்லி அரசு ஒழுங்காகச் செய்து வருகிறது.

அந்த மோச வலையில் சிக்கி—வடநாட்டுத் தலைவர்களின் இதயங்களை யெல்லாம் தடவித் தெரிந்து வந்தவர் சஞ்சீவியார். அதனுல்தான் சுப்பிரமணியத்தைப் பார்த்துச் சொன்னுர்.

"நீங்கள் டெல்லி மந்திரியானவுடன் வடவர் புத்தி உங்களுக்கு வந்துவிட்டது"—என்று இடித்துக் கூறியிருக்கிருர்.

டெல்லி அரசு கண்டனக் குரல் எழுப்புமே என்று சஞ்சீவி ரெட்டி கவலைப்படவில்லை. டெல்லி அரசின் மிரட்டலுக்குப் பயந்தால் சொந்த மாநில வளர்ச்சி சுருங்கிப் போகும் என்பது அவருக்குத் தெரியும்.

தேசிய உணர்ச்சியா? மாநில உணர்வா? என்ற பிரச்சினையில் இரு பெரும் அமைச்சர்கள் மோதிக் கொண்டிருக்கிருர்கள்.

சஞ்சீவி ரெட்டியாரின் பேச்சிலிருந்து தேசிய ஒருமைப்பாடென்பது நடைமுறைக்கு ஒவ்வாத போலி வாதம் என்பது பிரகாசமாகத் தெரிகிறது.

இந்தப் போலி வாதத்தைத் திரும்பத் திரும்பப் பாடுவதின் மூலம் வெற்றி பெறலாம் என மத்திய அரசு கனவு காணுகிறது.

சட்டத்தையும் அதற்குச் சாதகமாகத் திருத்தியமைத்துக் கொண்டிருக்கிறது.

எத்தனை சட்டங்கள் படையெடுத்து வந்தாலும் போலித் தேசிய உணர்வு பொடிப் பொடியாகும் என்பதைத்தான் திருவண்ணுமலை வெற்றி தெளிவாகச் சொல்லியிருக்கிறது!

திருவண்ணுமலை தந்திருக்கும் பாடமும்—சஞ்சீவிரெட்டியாரின் உள்ளக்குமுறலும்—சுப்பிரமணியம் போன்றவர்களின் அடிமைப் புத்தியை நீக்கட்டும்.

டெல்லியின் கண்களைத் திறக்கட்டும்.

—தினகரன்

## வெற்றி வெற்றி என்று

# துள்ளித் திரிந்தவரே! தூற்றிப் பறந்தவரே!

தமிழ்நாடு முழுவதும் ஆவலோடு எதிர்பார்த்த திருவண்ணாமலைத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர் ப. உ. சண்முகம் வெற்றிவாகை சூடி உள்ளார் என்ற செய்தி கேட்டு மகிழாதார் உள்ளமே இல்லை. ப, உ. சண்முகத்தின் வெற்றியாவரும் எதிர்ப்பார்த்த ஒன்று தான். என்றாலும் தி. மு. க.வை தோற்கடிக்கக் காங்கிரஸ் கட்சி செய்த தில்லுமுல்லுகளை நினைக்கும் போதுதான் நமக்கு வியப்பாக இருக்கிறது.

பொதுவாக ஆளும் கட்சியை ஒழிக்கத்தான் எதிர்க்கட்சிகள் கூட்டுச் சேருவது வழக்கம், ஆனால் துரதிர்ஷ்டம் பிடித்த தமிழ் நாட்டிலோ நல்லதொரு நடிகரின்பேச்சைகேட்டுமக்கள் ஓட்டு போட மாட்டார்களாம். இது புது எம்.எல்.ஏ.ஒருவரின் கூற்று. காங்கிரஸ் வெற்றி நிச்சயமாம் இது எல்லா மந்திரிகளின் வழக்கமான பல்லவி.

## வாய்மூடிப் போனீரே!

## வார்த்தைகளைக் காணோமே?

காங்கிரஸ் எனது பங்காளி அதை வெற்றி பெறச் செய்வேன். இது குட்டிக்காங்கிரசு கட்சித் தலைவரின்பிதற்றல். தி. மு.க. தோற்பது உறுதி இது மூக்கானந்தங்களின் உளறல்.

இவ்வளவு எதிர்ப்பு இருந்தும் ப. உ. சண்முகத்தின் வெற்றியில் எனக்குநிச்சயம் நம்பிக்கை உண்டு என்று கூறிய தென்னகத் தலைவன் 'அண்ணாவின் கூற்றுதான் பலித்தது.

நீங்கள் இந்திக்கு எதிர்ப்பு தெரிவிப்பதை திருவண்ணாமலையில் தி.மு.க. அபேட்சகர் சண்முகத்தை வெற்றிபெறச்செய்து காட்டுங்கள். அந்த வெற்றியை நேருவிடம் காட்டி இந்தித் திணிப்பை இனி இல்லாமல் ஆக்குகிறேன் என்றார் நமது அறிஞர் அண்ணா. மக்களும் அண்ணாவின் தீர்ப்புக்குச் செவி சாய்த்துவிட்டார்கள். இனி இந்தி இங்கு நுழையவே முடியாது இது உறுதி.



அன்றுநடந்தபாராளுமன்றத் தொகுதியில் திருச்செங்கோட்டில் காங்கிரஸ் அடிபட்டது. இன்று நடந்ததிருவண்ணாமலை சட்டசபை தொகுதியில் காங்கிரஸ் அடிபட்டுள்ளது.இந்தியா என்ற நிலையில் ராஜ்கோட் தொகுதியில் காங்கிரசிற்குஎவ்வளவு அடியோ அதைவிட பெரும் அடி திருவண்ணாமலையில் காங்கிரசிற்கு கிடைத்திருக்கிறது. தமிழ்நாட்டிற்கு நேருவந்துபோன உடன்நடந்த இந்தத் தேர்தலில் காங்கிரஸ் தோற்றிருக்கிறதென்றால் இனி எந்த முகத்தோடு காமராசர் நேரு முகத்தில் முழிப்பார்.

# எந்த முகத்தோடு டெல்லிக்குப் போய்வருவீர்?

ஜனநாயக அமைப்பான தி.மு.க.வை ஒழிக்க எதிர்க்கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்த் தேசியக் கட்சி: திராவிடர்கழகம்,தமிழரசு கழகம்மற்றும்காங்கிரசிற்குவால்பிடிக்கும் கட்சிகளும் ஒன்று சேர்ந்தும் தி.மு.க. வைத் தோற்கடிக்க முடியவில்லை என்றால் தி.மு.க. வின் பெருமையை எடுத்துக் கூற வேறு என்னவேண்டும்.

தமிழக இடைத்தேர்தல்கள் நமக்கு ஒரு உண்மையைஉணர்த்துகிறது. அதாவது தமிழக மக்கள் தி.மு.க.விடம் ஆட்சியை ஒப்படைக்க ஆவலோடு இருக்கிறார்கள்.

நாங்குநேரியில் காங்கிரசை வெற்றி பெறச் செய்த மக்கள் முன்பு திருச்செங்கோட்டிலும் இப்போது திருவண்ணாமலையிலும் தி.மு.க.வை வெற்றிபெறச் செய்ததேன்? என்பதைக் காங்கிரஸ்காரர்கள் சிந்தித்துப் பார்கக வேண்டும். அதாவது நாங்குநேரியில் தி.மு.க.போட்டி போடவில்லை. எனவே வேறு வழியில்லாமல் காங்கிசை தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் திருவண்ணாமலையில் தி. மு. க. போட்டியிட்டது, வெற்றிபெறச் செய்தார்கள். காரணம் தி.மு.க.விற்கு போடும் ஒவ்வொரு வோட்டும் மக்கள் நல்வாழ்விற்கு போராடும் என்பதை தமிழக மக்கள் நன்கு புரிந்து கொண்டார்கள். இதற்கு வழிகாட்டியாக இருந்ததிருவண்ணாமலை மக்களுக்கு தி. மு. கழகம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது.


தி.மு.க.வைத்தோற்கடிக்கத்தான் எவ்வளவுபொய்ப்பிரச்சாரங்கள்; காமராசர் கார் முன்கல் வைத்தாராம் தி.மு.க. வாலிபர்!

திருவண்ணாமலைத் தேர்தலால் மூக்குடைபட்டவர்கள் திருவாளர்கள் காமராசர், கக்கன், பக்தவத்சலம், ராமையா, மஜீது, மன்றாடியார், பெரியார், சம்பத், முருகானந்தம், ம.பொ.சி, ராஜாத்தி மற்றும் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் ஆகியோர்கள், ராஜாத்தி அம்மாள் சொன்னார்கள் திருவண்ணாமலையில்தி.மு.கவிற்குஅரோகரா போடுவோம் என்று. முடிவில் காங்கிரசிற்குதான்மக்கள் அரோகரா போட்டு விட்டார்கள்.

கடைசியாக—ஒன்று திருவண்ணாமலையில்தி.மு.கஅபேட்சகர் ப. உ. சண்முகத்தை வெற்றிபெற உதவிய சுதந்திரா கட்சிக்கும்.முஸ்லீம் லீகிக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். பொதுத் தேர்தலில் பாராளுமன்றத் தொகுதியில் ஏழாக இருந்த நாம் இன்று எண்மரானோம். பொதுத்தேர்தலில் சட்டசபை தொகுதியில் ஐம்பதாகஇருந்த நாம் ஐம்பத்தொன்றாக மாறி உள்ளோம். இதே நிலையில் மக்கள் உணர்ந்து செயல்படுவார்களானால் 67-ல் தி.மு.க. ஆட்சியைக் கைபற்றும். இதில் சந்தேகமேவேண்டாம்.அதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் திருவண்ணாமலைத் தொகுதி மக்களுக்கு தி. மு. கழகம் என்றென்றும்கடமைப்பட்டுள்ளது.

**எம். எஸ். மணி**

## வாழ்க மணமக்கள்



மு. சண்முகம் சண்பகவல்லி

தி. மு. கழக நிலையப் பொறுப்பாளரும் 'தென்னகத் தலைவன்' இதழில் 'தோழன்" என்ற புனைபெயரில் மாவட்டச் செயலாளர்கள் பற்றி அருமையான தொகுப்பினை எழுதி வருபவரும் மேலைநாட்டு அறிஞர்களைப் பற்றிய வரலாறுக் கட்டுரை எழுதுவதில் வல்லமை பெற்றவருமான திரு. மு. சண்முகம் அவர்கள் தனது அக்காள் மகள் சண்பகவல்லியை நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் திருமணம் செய்துகொண்டார்கள்.

திருமணம் 30-6-63 அன்று சென்னை ராயபுரத்திலுள்ள விருதுநகர் நாடார் உயர்தர ஆரம்பப் பள்ளியில் சிறப்பாக நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி கலைஞர் மு. கருணாநிதி, என். வி. நடராசன், காஞ்சி கல்யாணசுந்தரம், மன்னை நாராயணசாமி, சத்தியவாணி முத்து. சென்னை மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மணமக்கள் சார்பில் டி. கே. கபாலி நன்றி கூறினர்.

திருக்குறளும்—தமிழும் போல மணமக்கள் இனிது வாழ்க! வாழ்க!! என 'தென்னகத் தலைவன்' சார்பாக நாமும் வாழ்த்துகிறோம்.

அடுத்தவன் குழந்தைக்குத் தானே தந்தையென்று தம்பட்டமடித்துக் கொண்டு வரும் இலக்கியக் கள்ளர்களை இந்தப் பகுதியில் தலைகுனிய நிறுத்துகிறோம்! அந்த வரிசையில் இரண்டாம் முறையாகவும் தலை குனிந்து நிற்பவர் செம்படை அணி வகுப்பைச் சார்ந்த தோழர் ஜெயகாந்தன். இந்தத் தடவை ஆதாரத்தோடு குட்டை உடைத்து வைப்பவர் தஞ்சையைச் சார்ந்த திருமதி 'இந்திரா' என்பவர்.

## கழுத்தை அறுப்பது கம்யூனிஸ்டுகளின் குலத்தொழில்!

# கருத்தைத் திருடுவதும் அப்படித் தானா?

# அடுத்தவன் பெற்றது உனக்குச் சொந்தமா?

# அந்த எழுத்தை உலகம் மதிக்குமா?

குடுகுடுப்பாண்டி கொண்டு வருவானே ஒட்டுத்துணி அதனைக் கூட ஓரளவு ஒட்டுத் துணியென்று ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் பீதாம்பரத்தைக் கொண்டுபோய் ஒட்டுத் துணியுடன் இணைக்கமாட்டார்கள். அப்படி இணைப்பவனை இணைத்துப் போர்த்தி இருப்பவனைக் கண்டு 'ஆஹா இலக்கிய மேதைவருகிறார்' என்று யாரும் சொல்வார்களோ?

ஆம்! அப்படித்தான் சொல்கிறார்கள் தமிழ் நாட்டு மனிதர்கள் சிலர். என்ன செய்வது?

கலையறிவைப் பிழிந்து உள்ளத்தை உருக்கி வார்த்து உழைப்பைக் கொட்டி வளர்த்துப் படைக்கிறான் கலைஞன். அவன் படைத்த இலக்கியம் மக்கள் மனதிலே உயர்வாக வைக்கப்படுகின்றது. ஆனால் உயிர்போகும் உழைப்பால் உருவாக்கிய அருமையான இலக்கியங்களுக்கு நடுவிலே மற்றொரு இலக்கியக் கலைஞன் உழைத்த உழைப்பைத் தனதென்று திருடி எடுத்து சோம்பிக் கிடந்த தன் பேனாவை ஓட்டிக் காப்பியடித்து, இல்லை இல்லை அதை உண்மையில் உருவாக்கிய கலைஞனைக் கொன்று தூய தமிழை இத்த ஈனத் தொழிலுக்குப் பயன்படுத்தும் கொலைபாதகச்செயலைச்செய்து புத்தகம் வெளியிட்டுப் புகழ் அடைந்த பின், பிற இலக்கிய கலைஞர்களை ஏளனம் செய்யும் அளவுக்கு அந்தக் காப்பிக் கயவரை வளர விட்டது யார்? ஒட்டுத் துணியுடன் மேல் நாட்டு நைலானை இணைத்துவரும் அந்த கோமாளியை இனம் கண்டு உண்மைக் கலைஞர்களுக்கு வரும் இழுக்கைத் துடைக்கும் துணிவு தமிழ் மக்களுக்கு ஏன் இல்லை?

இந்தக் கேள்விகளைத்தான் சென்ற இதழிலே மக்கள் மன்றினை நோக்கிக்கேட்டது 'தென்னகத் தலைவன்'. ஒட்டக் கூத்தனும் குட்டுவதற்குப் பிள்ளைப் பாண்டியனும், சீத்தலைச் சாத்தனாரும் கள்ளப் 'புலவர்களை விரட்டியடித்த காளமேகப் புலவரும், நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமேயென்று பாடிவந்த நக்கீரர் வழியிலே வந்த தமிழ்க் கலைஞனுக்கா இந்தக் கேவல நிலை?

ஏழைகளைப் பற்றியும் ஒடுக்கப்பட்டவர்களைப் பற்றியும் இன்னும் தாழ்த்தப்பட்ட வழுக்கி விழுந்த பரிதாபத்துக்குரிய எல்லோரைப் பற்றியும் இலக்கியம் சமைப்பது பாராட்டுக்குரிய செய்திதான்—ஆனால் அந்த ஏழை எளியவரின் அந்த நயந்த. வழுக்கி விழுந்த, தாழ்த்தப்பட்ட மக்களின் சோகக் குரல் எழுத்திலே ஒலிக்கவேண்டுமே தவிர, அவர்கள் உண்மை உருவங்களாகக் காட்சியளிக்க வேண்டுமே தவிர, பிறநாட்டு எழுத்தாளனின் கதாபாத்திரங்களைத் திருடி அவர்களுக்கு தமிழ் நாட்டு உடை அணிவித்து எழுதப்பட்டால்-அதை எழுதிய கலைஞன் "யாருக்காக அழ வேண்டும்" என்றால்-அதையும் தனக்காகத் தன் கேவலத் தொழிலுக்காகத்தான் அழ வேண்டும்.

ஜெயகாந்தனின் 'உறங்குவது போலும்'-என்று ஒரு கதை! அதை கதைஎன்று சொல்வதைவிட மேல்நாட்டுக்காரி ஒருத்தியின் வாந்தி என்றே சொல்லலாம்-கூசாமல் ஒரு ஆங்கிலப் பெண் எழுத்தாளருடைய நாவலில் கைவைத்தது மட்டுமல்லாமல் அந்த நாவலை அப்படியே 'ஈயடிச்சான்' மாதிரி காப்பி செய்து அதில் வருகிற பாத்திரங்கள், சம்பவங்கள் கதைத் திருப்பங்கள்,வர்ணனைகள், எல்லா இழவையும் அப்படியே கொள்ளையடித்துத் தன் சிறு கதையில் கொட்டியிருக்கிறார் அஞ்சாமல். அட! பாத்திர சம்பவங்களைத்தான் காப்பியடித்தார் என்றால் அதில் வருகிற நாய் ஒன்றைக்கூட அப்படியே காப்பியடித்து தமிழ் நாயாக ஆக்கிவிட்டார் 'சிறு' கதை மன்னர் ஜெயகாந்தன்! 'ஆஹா' என்னே திறமை! இந்தத் திறமைதானே நம்மை நாமே வெட்டிக் கொள்ளும் அபாரத் திறமை!

அந்த ஆங்கில நாவல் 'மேரி காரல்லி' என்கிற ஆங்கில நாவலாசிரியை எழுதியது நாவலின் பெயர் 'வென்டெட்டா' (Vendetta) இந்த நாவலை அப்படியே சுருக்கிக் கதையமைத்து ஜெயகாந்தன் என்ற பெயரையும் போட்டு, தமிழ் நாட்டு பத்திரிகாசிரியர் ஒருவரிடம் கொடுத்துப் பணம் பண்ணிய தந்திரம் ஒன்றுக்கே எவ்வளவு புகழ்ந்தாலும் தகும்.

ஆம்! புகழ் எப்படி வந்தால் என்ன என்பது தானே ஜெயகாந்தன் போன்றோரின் குறிக்கோள்! "திருடப் போனாலும் தெத்தத் தெரியவேண்டும்" என்று ஒரு பழமொழி உண்டு. தமிழகத்திலே அப்படிக்கூடத் தெரியாமல் திருடித் தொலைக்கக்கூடாது? சே! திருடுவதைவிட இது கேவலம்தான். ஆனால் இந்த ஆங்கில நாவலில் வரும் 'பேபியோரோமானி' என்கிற கதாபாத்திரத்தை அப்படியே திருடி தமிழ் நாட்டுச் சூழல்களுடன் மிகத் திறமையாக 'சிவராமன்' என்ற பாத்திரமாக ஆக்கி ஆங்கிலத்தில் 'நினா'-என்று வருகிற கதாநாயகிக்கு அப்படியே சேலையும் ரவிக்கையும் கட்டிவிட்டு மாலதி' என்கிற பாத்திரமாக வாந்தியெடுத்து, ஆங்கில நாவலில் வருகிற ஆங்கில நாய்க்கு 'சர்தார்' என்கிற 'ஹிந்திப்'பெயர் கொடுத்து 'தமிழ் நாயாக'—ஆக்கி அப்படியே கதை சம்பவங்களையெல்லாம் காப்பியடித்து முடிவைமட்டும்கொஞ்சம் மாற்றிவிட்டு அபாரமாக சிறுகதை மன்னரின் தனித் வேலைகள் பொங்க முடித்திருக்கிறார் ஜெயகாந்தன்! பரிதாபம்! மிகப் பரிதாபம்.

இவர் இப்படித் திருடித் தொலைத்திருப்பது இதுவரை எந்தத் தமிழ் எழுத்தாளனுக்கும் ஏற்படாத மகாப் பெரிய துணிச்சல்! காப்பியடித்தவர் உண்டு. ஆனால் இப்படி பத்து இருபது நாவல்கள் எழுதி ஓரளவு புகழ்பெற்ற கதாசிரியை 'மேரிக்காரல்லி'யின் ஒரு நாவலையே காப்பியடித்திருக்கும் துணிச்சல், மேதைத்தனம். இதுவரை யாருக்கும் இராத அபார நிலையாகும்.

கதைக்குத் தலைப்பு வைப்பதில்தான் ஜெயகாந்தன் அவர்களுக்கு என்ன திறமை! அடடா! அடடா! 'உறங்குவதுபோலும்' என்பதுதான் தலைப்பு! 'உறங்குவது போலும் என்கிற குறளின்' தத்துவத்தை உணர்ந்தவரல்ல ஜெயகாந்தன் 'உறங்குவது போல உலகம்.' என்று நினைத்துத் தனக்குத் தானே உறங்கிக் கொண்டிருப்பவர். தமிழ்க் கலைஞர்களுக்கு நடுவே இப்படி ஒரு ஒட்டுத் துணிப் பீதாம்பரம் இருப்பது மகாக் கேவலம் என்றே துணிவுடன் கூற எல்லோரும் நினைக்க வேண்டும். இதே கதையில்-ஆங்கிலத்தில்; கதாநாயகனைச் சவப்பெட்டியில் இட்டுவிடுகின்

(10-ம் பக்கம் பார்க்க)

### ஆட்சியாளர்களே!
### மொழி விஷயத்தில் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளுங்கள்.

"ஆங்கிலம் அன்னியமொழி; இதை உதறித்தள்ள வேண்டும். இந்தி நமது நாட்டு மொழி, அதை ஆட்சி மொழியாகச் செய்யவேண்டும்"—என்று மட்டுமே கூக்குரலிடும் குறுகிய மனப்பான்மையுள்ளவர்கள் பிரதிவாதத்தின் பலத்தையும், நியாயத்தையும் உணரக் கூடியவர்கள் அல்ல. அவர்கள் உண்மையை உணர விரும்பாதவர்கள். ஆனால் இந்தமாதிரிதான் நமது ஆட்சி மொழி விஷயம் முடிவு செய்யப்படுமேயானால், நாம் பதினேழாம் நூற்றாண்டு காலத்துக்கே சென்றுவிடலாம். சரித்திரத்திலும் பின்நோக்கிச் செல்ல வேண்டியதுதான். உண்மையிலேயே இந்தியா நவீன தேசமாகத் திகழ வேண்டும் என்று விரும்பினால், தற்போதய நிலையில் உள்ளபடி புத்திசாலித்தனத்துடன் உணர்ந்து கொள்வதுடன் உள்நாட்டு, வெளிநாட்டு நிலைமையையும் புரிந்து கொண்டு, அனுகூலமாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

7-7-63 'கல்கி' இதழில்
—டி. டி. கார்வேயின் கருத்து



## போலீசாரே பயப்படாதீர்?

திருவண்ணமலை தேர்தல் முடிவு—ஆட்சியாளர்கள்நல்வழியில்இனியாவது யாவது நடக்க வேண்டுமென்பதைச் சுட்டிக் காட்டுகிற முடிவாகும். தமிழக முதலமைச்சர் காமராசர் பேசிய தேர்தல் கூட்டங்களில் எல்லாம்—"ஆமாம்—நான் வரி போட்டேன்! உண்மைதான்–வரி போட்டால் என்ன? வரி போடாமல் ஆட்சி நடத்த முடியுமா?" — என்றெல்லாம் கேட்டு—அதிக வரி விதித்திருப்பதை அவரே ஒப்புக்கொண்டார்.

அந்த அதிக வரி விதிப்பிற்கும், அரசாங்கம் மேற்கொண்டுள்ள, வேறு பல தவருன செயல்களுக்கும், இந்தித்திணிப்பிற்கும், மக்கள் விருப்பத்திற்கு மாருன புதிய சட்டங்களுக்கும், திருவண்ணமலைத் தொகுதி மக்கள் தகுந்த தீர்ப்பளித்துவிட்டார்கள். இந்த முடிவைப் பார்த்த பிறகாவது ஆட்சியாளர்களே! வரியைக் குறையுங்கள்!

தோழர்களே! போலீசாரை எவரும் கண்டிக்காதீர்கள்! அவர்கள் விவரம் புரியாதவர்கள் அல்ல! போலீசாரும், போலீஸ் அதிகாரிகளும்கைராட்டை சுற்றி இப்படிப்பட்ட பதவிக்கு வரவில்லை. மிகவும் கஷ்டப்பட்டு பல தொல்லைகளுக்கு ஆளான பின்புதான் இப்படிப்பட்ட பதவிகளில் இருக்கின்றனர்.

இப்பதவி காங்கிரசார் இட்ட பிச்சை அல்ல! ஒரு சப்-இன்ஸ்பெக்டர் ராஜிநாமா செய்தால் தேர்தலிலே நின்றுகூட எம். எல். ஏ. ஆகலாம். எங்கள் கழகத்தில் உள்ள பாலகிருஷ்ணன் எம். எல். ஏ. போலீஸ் கான்ஸ்டபிளாக இருந்தவர்தான். ஆகவே போலீஸ் அதிகாரிகள் பயத்தைப் போக்கிக் கொள்ளவேண்டும்.

மந்திரிகளால் போலீஸ் அதிகாரிகளை ஒன்றும் செய்ய முடியாது. போலீசாருக்கு இந்த ஆட்சிமீது உண்மையிலே வெறுப்பு! எனவே மக்களைத்தடியால் அடித்துபொதுமக்களுக்கு ஆட்சியாளர் மீது மேலும் வெறுப்பு உண்டாகுமாறு செய்கிருர்களோ என்று நாம் சந்தேகப்படவும் நியாயமிருக்கிறது.

திருவண்ணமலைத் தேர்தலுக்குப் பிறகு ஈரோட்டு 'ஐயா'வும்—தென் சென்னையில் மூக்கறுபட்ட கு. கா. தலைவரும் சந்திக்கிருர்கள். திருவண்ணமலை முடிவுபற்றி இருவரும் விவாதிக்கிருர்கள். ஐயா மனம்விட்டுப் பேசுகிருர் கேளுங்கள்.



# ஐயாவும்-ஐஸ்புருட்டும்

**ஐஸ் புருட் :** வணக்கம் அப்பா...

**அய்யா :** வாப்பா... வா... என்ன முகம் வாட்டமா இருக்கு?

**ஐஸ் :** திருவண்ணமலை முடிவுதான்...

**அய்யா :** இதிலென்ன இருக்கிறது? தெரிந்ததுதானே இது?

**ஐஸ் :** நாமெல்லாம் முழுமூச்சாக தி. மு. க.வை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தும்...

**அய்யா :** என்னத்தைப் பிரச்சாரம் செய்திட்டோம்? காங்கிரஸ் காரன் கொடுத்த காசுக்கு ஒப்பாரி வைச்சுட்டு வந்திட்டோம். அவ்வளவுதான்.

**ஐஸ் :** எனன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்?

**அய்யா :** வேறு என்னவாம்! வெங்காயம்!எவன் நம்மப் பேச்சைக் கேட்டான். 'சுதேசமித்திரன்' எழுதியபடி நாமும் இந்த நாட்டில் இருக்கிருேம் என்பதைக் காட்டிக்க முடிந்ததே தவிர எவன் நம்மப் பேச்சைக் கேட்டான். காசு கொடுத்தான் அவன்—பேசிவிட்டோம நாம்—அவ்வளவுதான்!

**ஐஸ் :** அப்படிச் சொல்லாதீர்கள்! நான் முழுமனதுடன் காங்கிரசை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தேன்.

**அய்யா :** ஆமாம்... ஆமாம்... உன்னைப்பற்றி எனக்குத் தெரியாதா? கண்ணீர்த்துளிகள் மீது—உனக்குள்ள குரோதத்தை வெளிக்குக் காட்டிக்கத்தான் நீ காங்கிரசை ஆதரித்துக் காட்டினுய். அதுமட்டுமா? இந்தி எதிர்ப்புப் போராட்டம்னு நீ விட்ட 'புஸ்வான'த்தின்போது உன்னைப் பேருக்கு சிறையில் தள்ளி மறுநாள் வெளியே விட்டுட்டதிற்காகத்தான் நீ காங்கிரசுக்கு துதிப்பாடிக் கொண்டிருக்கே...

**ஐஸ் :** நான்தான் அப்படி? கம்யூனிஸ்டுகள் ...

**அய்யா :** அவர்கள் மட்டும் என்னவாம்? தமிழ்நாட்டில் தி.மு.க. என்றைக்குத் தோன்றியதோ அன்றைக்கே கம்யூனிஸ்டுகள் அழிவுப்பாதையை நாடிட்டாங்க. அது மட்டுமா? சீனக்காரன் வந்தாலும் வந்தான் கம்யூனிஸ்டுகள் பாடுதான் படு பயங்கரமாப் போயிடுச்சு. பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டுவந்து சிறையில் தள்ளியவர்களையெல்லாம் விடுதலை செய்ததினுல் தான் கம்யூனிஸ்டுகள் காங்கிரசை ஆதரிச்சுப் பிரச்சாரம்செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். சீன-இந்தியா தகராறு என்னைக்குத் தீருதோ அதுவரையிலும் கம்யூனிஸ்டுகள் காங்கிரசுக்கு நடைபாதை விரித்துத் தான் ஆகனும்.

**ஐஸ் :** நீங்கள் எப்பவும் இப்படித்தான் எதையாவது...

**அய்யா :** யாருடா... நீ... சுத்த மடையனு இருக்கியே!...

**ஐஸ் :** நீங்கள் மட்டும் காங்கிரசை ஆதரிக்கவில்லையா?

**அய்யா :** நான் எங்கேடா காங்கிரசை ஆதரிக்கிறேன்? காமராசரை அல்லவா ஆதரிக்கிறேன்.

**ஐஸ் :** காமராசரை ஆதரித்தால் காங்கிரசை ஆதரிப்பதாகத் தான் அர்த்தம்.

**அய்யா :** வெங்காயம்...அர்த்தத்தைக் கண்டுட்டான். எல்லாம் பணம்தாண்டாக் காரணம். இந்தக் கண்ணீர்த்துளிகள் கூப்பிட்டால் கூடத்தான் போவேன். அவர்களிடம் பணம் ஏது? எனக்குப் பணம் கொடுத்து ஆதரவு தேடுவதைவிட நான் காங்கிரசை ஆதரிப்பதாலேயே அவர்களுக்கு நன்மையிருக்கு என்பது தெரிந்தவர்கள்."

**ஐஸ் :** என்ன சொல்கிறீர்கள்?

**அய்யா :** ஆமாண்டா! தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசும்போது காமராசரின் சாதனைகளைப்பற்றி பேசுவேன். பாப்பான்களுக்கு அவருடைய ஆட்சியால் எவ்வளவு கேடுநேர்ந்தது என்பதையும், எந்தெந்த பதவியில் தமிழனை உட்காரவைத்து பாப்பானை கீழே இறக்கி இருக்கிருர் என்பதைச் சொன்னதும் நாட்டில இருக்கிற எந்தப் பாப்பானுவது காங்கிரசுக்கு ஓட்டுப் போடுவானு? சாதியையும் சாமியையும் கிண்டல் செய்கிறேன். பக்தி உள்ளவன், சாதித்திமிர் பிடித்தவனுவ எவனுவது காங்கிரசுக்கு ஓட்டு போடுவானு? காங்கிரசுக்கு ஓட்டு கிடைச்சா எனக்கென்ன? கிடைக்காவிட்டால் எனக்கென்ன? எனக்கு வேண்டியது பணம். திருவண்ணமலையைத்தான் எடுத்துக் கோயேன்! முழுசா ஒரு ரூபாய் கிடைத்தது போதாதா மூனு நாள் பேச்சுக்கு? இதெல்லாம் தெரியாமல் நீயும் அரசியலில் இறங்கிவிட்டாய். ஒரு கட்சிக்குத் தலைவனுகவும் ஆயிட்டே. அரசியலில் உன் சிறுபிள்ளைத்தனத்தைக் கண்டுதான் 'முரசொலி'க்காரன் உன் வாயிலே 'ஐஸ்புருட்'டைக் கொடுத்தான்.

**ஐஸ் :** அப்பா............

**அய்யா :** சும்மா வாயை மூடுடா...உனக்கு அரசியல் பாடம் கற்றுத் தருகிறேன் கேள். திருவண்ணமலையில் தேர்தலுக்கு நின்றது இரண்டு கட்சிகள். ஒன்று ஆளும் கட்சி. மற்றது எதிர்க்கட்சி நீ என்ன செய்திருக்கனும்...

**ஐஸ் :** ............!!!???

**அய்யா :** ஆளும் கட்சியை எதிர்த்து நிற்கும் கட்சியை ஆதரித்து பிரசாரம் செய்திருக்கவேண்டும். செய்தாயா?

**ஐஸ் :** நான் மட்டுமா? நீங்களும்தான்!

**அய்யா :** என்னைப்பற்றி ஏன் பேசுகிருய்? எனக்குக் காசுதான் முக்கியம் என்று வெளிப்படையாகச் சொல்கிறேனே. சமீபத்தில்தான் நான் கூட்டத்துக்கு ரேட்டை ஏத்தினேன். எதற்கு? திருவண்ணமலையை உத்தேசித்துதான். என்னை விட்டுத்தள்ளு......உன்னை எடுத்துக்கோ நீ, தி.மு. க.வை ஆதரித்துத்தானே பிரச்சாரம் செய்திருக்கனும். உன்னுடைய கொள்கைக்கும் காங்கிரசுக்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா......? தமிழ் நாட்டின் அரசியலே மிகமிக மட்டமாகப் போயிடிச்சு. எதிர்க்கட்சி என்ற மரியாதையும் யோக்கியதையும் தி. மு. க. வுக்குத் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் கிடையாது.

**ஐஸ் :** அப்படிச் சொல்லாதீர்கள். இன்னும் ஐந்தாண்டுகளுக்குள் தி' மு. க. வைவிடப் பெரிய கட்சியாக த. தே. க. வைக் கொண்டு வந்து விடுகிறேன்.

**அய்யா :** அப்படியா...? ஆசை அதிகமாகத்தான் இருக்கு! செயலில் காட்டவேண்டுமே? நானும்தான் முப்பது வருஷமா கட்சி நடத்துகிறேன்......என்னைவிடவா நீ பெரியத் தலைவனு வந்துவிட முடியும்...ஏதோ பூவோடு சேர்ந்த நாறும் மணக்கும் என்பதுபோல அண்ணுதுரையோடு கொஞ்சநாள் இருந்ததினுல் அரசியலில் இந்த சின்ன மரியாதையாவது உனக்கு இருக்கு. நானுக இருந்தால் உன்னைத் தலைதூக்கவே வைத்திருக்க மாட்டேன்.

**ஐஸ் :** உங்கள் காலத்திலேயே தமிழ் நாட்டின் ஆட்சியை நான் கைப்பற்றி விடுவேனப்பா.

**அய்யா :** கனவுதாண்டா காணவேண்டும். அடுத்த ஆளும் கட்சி தி. மு. க. தாண்டா. இதில் யாருக்கும் சந்தேகம் இருக்கமுடியாது.

**ஐஸ் :** திருவண்ணமலையில் காங்கிரஸ் தோற்றுவிட்டதினுல் அப்படிக் கூறிவிடமுடியுமா? நாங்குனேரியிலும், போடியிலும் காங்கிரஸ் வெற்றிபெற வில்லையா?

**அய்யா :** என்னடா பெரிய வெங்காயவெற்றி......நாங்குனேரியிலும், போடியிலும் போட்டியிட்டது யாருடா...? சுதந்திராவும், சுயேச்சைகளும். அதனுல்தான் காங்கிரஸ் வெற்றி அடைஞ்சுது.

**ஐஸ் :** ஏன்? காங்கிரஸை எதிர்த்து நின்ற சுதந்திராவுக்கும் சுயேச்சைக்கும் தி. மு. க. ஆதரவு கொடுக்கவில்லையா?

**அய்யா :** ஆதரவு கொடுத்தால் தி. மு. க. நின்றதாக அர்த்தமா? திருவண்ணமலையில்தான் சண்முகம் நின்னுன். என்ன ஆச்சு? காமராசர் எத்தனை தடவை வந்து வந்து போனுர். ஓட்டு வாங்குவதற்கென்றே சாதிக்கு ஒரு மந்திரியை வைத்து அத்தனை பேரும்தான் திருவண்ணமலைக்கு வந்தார்கள். போதாக்குறைக்கு நீயும், நானும் மற்றவர்களும் போனுேம். முடிவு எப்படி ஆச்சுப் பார்த்தியா? காங்கிரஸ் தோத்துப் போச்சு... 1962 தேர்தலுக்குப் பிறகு தி. மு க. காங்கிரஸ் நேரடிப் போட்டி இரண்டு இடங்களில் நடந்திருக்கு. ஒன்று திருச்செங்கோடு பாராளுமன்ற இடைத் தேர்தல். மற்ருென்று திருவண்ணமலை. இந்த இரண்டு இடத்திலும் தி.மு.க. தான் வென்றிருக்கு. இதிலிருந்து என்ன தெரியுது......

**ஐஸ் :** ............

**அய்யா :** பொதுத் தேர்தலுக்குப் பிறகு நடக்கும் இடைத் தேர்தலில் ஆளும் கட்சி தோல்வி கண்டால் மக்கள் இந்த ஆட்சியை நம்பவில்லை என்று பொருள். இப்ப இருக்கிற மந்திரிசபை மானமுள்ள மந்திரி சபையாக இருந்தால் திருச்செங்கோடு முடிவுக்குப் பின்பே ராஜினுமா செய்திருக்கனும்.

**ஐஸ் :** என்ன இப்படி பேசுகிறீர்களப்பா......?நீங்களும் ஒரு தி. மு. க. தான் போலிருக்கு

**அய்யா :** உண்மையைச் சொன்னுல் தி. மு. க. என்கிறீர்கள். சரி...சரி...இத்தோடு நிறுத்திடுவோம். அதோ வீரமணி வருகிருன் நாம் பேசுவது அவன் காதில் விழுந்தால் அவன் தி. மு. க. வில் சேர்ந்திடப் போருன். நான் இருக்கும் வரையிலாவது தி. க. இருக்கட்டும்.

**ஐஸ் :** சரி...நான் வருகிறேனப்பா...

**அய்யா :** ஆமாம்...திருவண்ணமலையில் உனக்கு எவ்வளவு அறுவடை?

**ஐஸ் :** குறும்புக்காரரப்பா...உங்களுக்குக் கிடைத்ததில் பாதி தான்......

(ஐஸ்புருட் கண்ணைக் கசக்கியபடியே வெளியேறுகிருர்.)

எழுதியவர் : **கடலூர் இராமையன்.**

# இது உண்மைதானு?

பள்ளிகளிலெல்லாம் தமிழ் முழங்கி வருவதாகச் சொல்கிருர்கள் நமது அமைச்சர் பெருமக்கள்.

வடமொழி எங்கும் வற்புறுத்தப்படவில்லை என்று வாய்நீளம் காட்டுகிருர்கள் மேடைகளில்!

இதோ கீழே காணும் இந்த அக்கிரமத்துக்கு என்ன பதில் சொல்லப்போகிருர்கள்?

சென்னை ராஜா அண்ணமலைபுரத்திலுள்ள ஒரு உயர்நிலைப் பள்ளியில்-காலையில் ஆசிரியர் வகுப்பிற்குள் நுழையும் போது பிள்ளைகள் "நமஸ்காரம்" என்று சொல்லுவது வழக்கமாம். இதைச் சகித்துக்கொள்ள முடியாத ஒரு தமிழாசிரியர் பிள்ளைகளை அழைத்து நமஸ்காரம் வேண்டாம். தூய தமிழில் வணக்கம் என்று சொல்லுங்கள் என்று சொல்லிவைத்தாராம். குழந்தைகளும் அவ்வாறே 'காலை வணக்கம், என்று சுற்கண்டுத் தமிழில் சொல்ல ஆரம்பித்தனவாம்.

இதைக் கேட்கச் சகியாத அந்தப் பள்ளியின் மானேஜ்மெண்டார் அந்தத் தமிழாசிரியரை சத்தமின்றி வெளியேற்றி விட்டார்கள் என்று கூறப்படுகிறதே இது உண்மைதானு?

காங்கிரஸ் ஆட்சியில் தமிழ் பற்றுடையவர்கள் நிம்மதியாக வாழ முடியாதா? என்று அண்ணமலைபுரத்து மக்கள் ஆளுக்கொரு பக்கமாகப் பேசிக்கொள்ளுகிருர்களே இது உண்மைதானு?





## பிரிவினைக்குக் கிடைத்த ஓட்டு!

கம்யூனிஸ்டுகள் திருவண்ணமலையில் தேர்தல் பிரச்சாரம் செய்கையில் "கிடைக்காது, கிடைக்காது, திராவிட நாடு கிடைக்காது" என்று இதைத்தான் அவர்கள் முழக்கமிட்டுக் கொண்டு பேசினுர்கள். ஆகையினுல் பிரிவினைக்கு ஓட்டுப் போடுங்கள் என்று நாங்கள் கேட்கவில்லை, பிரிவினைக்கு ஓட்டுப் போடாதீர்கள்! என்று நீங்கள் கேட்டீர்கள்.

ஓட்டு எங்களுக்குக் கிடைத்தது. அதனுடைய முடிவு என்ன என்பதை நீங்கள் உணரவேண்டும். இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்ருல் நாங்கள் மேடையில் நின்ருலே பிரிவினை கேட்கிருேம் என்றுதான் பொருள்!

போன வருடம் வரை பிரிவினைக்காரன் என்று சொன்னுல்தான் தெரியும். ஆனுல் இன்றையதினம் அப்படியில்லை. கோயில் என்ருல் ஸ்ரீரங்கத்திற்குத் தான் சொல்வது என்று வைதீகர்கள் சொல்லுவது போல தி. மு. கழகம் என்ருல் பிரிவினைதான். இதை அறிந்துதான் திருவண்ணமலை மக்கள் எங்களுக்கு வாக்களித் திருக்கிருர்கள். இதிலிருந்து அரசியல் காற்று எந்தப் பக்கத்தில் அடிக்கிறது என்பதை தயவு செய்து அரசியலில் அதிககாலம் இருந்து பெற்ற அனுபவத்தை மறந்துவிட்ட அரசியல் வாதிகளே நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முன்னேற்றக் கழகத்தின்மேலுள்ள வெறுப்பினுல் மற்ற கட்சிகள் கழகத்தை அழிக்க எவ்வளவு முயற்சி எடுத்துக்கொண்டாலும் அது காங்கிரசிற்கு வலிவைத் தருமே தவிர—உங்களுக்கா வலிவைத் தரும்? டாக்டர் டானிக் எழுதிக்கொடுக்கிருர் என்ருல்—டானிக்கை குடிப்பவருக்குத்தான் வலிவு ஏற்படுமே தவிர, அதை எழுதிக்கொடுக்கும் டாக்டருக்கா வலிவு ஏற்படும்?

## இந்திரா காந்திக்கு உள்ள சலுகை இந்திய மக்களுக்குக் கிடையாதா ஏன்?

இந்தியத் துணைக்கண்டத்தின் தலைமை அமைச்சர் நேருவின் மகள் திருமதி இந்திரா காந்திக்குத் துணையாக அந்தரங்கக் காரியதரிசி மூவர் பணியாற்றுகின்றனராம்.

இம்மூவருக்கும் யார் ஊதியம் கொடுப்பது? அரசாங்கமா? காங்கிரஸா?

திருவாளர் கப்பூர் என்பவர் திருமதி காந்தியின் செயலாளரில் ஒருவர். அவர் மத்திய அரசின் வெளிநாட்டுத் துறையில் சம்பளம் பெறுகிருர்.

மற்ற இரண்டு செயலாளர் பெயர்களும் இவ்வாறே வேறு அமைச்சர் துறைகளின் சம்பளப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனவாம். இதிலிருந்து திருமதி காந்தியின் நிலை என்ன? அவர் மத்திய அரசின் பதவியிலுள்ளவரா?

திருமதி காந்தி காங்கிரசுக்குச் சிறந்த தொண்டுகள் செய்பவராக இருக்கலாம். அது வேறு விஷயம். அப்படியானல் காங்கிரஸ் கட்சியல்லவா அவர் சம்பந்தப்பட்ட செலவுக்குப் பொறுப்பேற்க வேண்டும்!

○

திருமதி காந்திக்கு ரஜிவ் என்றும் சஞ்சயன் என்றும் இரண்டு பிள்ளைகள் உள்ளனர். ஒரு மகன் ஆக்ஸ்போர்டில் கல்வி கற்றுக்கொண்டிருக்கிருர். இரண்டாவது மகன் மேல்படிப்புக்கு வெளிநாடு செல்லப் போகிருர்.

இதைப்பற்றி பாராளுமன்றத்தில் கேள்வி வருகிறது.

மற்றவர்களுக்கு இரக்கமில்லாமல் வெளிநாட்டுப் பயணத்துக்கோ, மேல்க்கல்விக்கோ அந்நியச் செலாவணி மறுக்கப்படுகையில் இவர்களுக்கு மட்டும் ஏன் அந்நியச் செலாவணி கட்டுப்படுத்தப்படாமல் அநுமதிக்கப்பட வேண்டும்? நேருவின் பேரன்மார் என்ற காரணமா?

(2-ம் பக்கத் தொடர்ச்சி(

முறியடிக்கவும், கடைசி ஒரு வாரம் மும்முரமான பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விடவும் முயன்றனர். அதற்காகக் காசுகளும் பணமும் தோழர்களும் தேவையென்று வேண்டிக் கொண்டனர். எப்படியெல்லாம் பணியாற்றினர்கள் என்பதை அவர்களே சொல்லுகிருர்கள். “திருவண்ணுமலையைக் கலக்கிய செம்படை ஊர்வலம். பிரிவினைச் சக்திகளை முறியடிப் போமென இடிமுழக்கம் எழுப்பிய வீரர்களின் பவனி. தெருவெங்கும் தேர்தல் இயக்கம் எங்கும் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரச்சாரக் கூட்டங்கள். தி.மு.கவுக்கு சூடான பதில். காங்கிரசை ஏன் ஆதரிக்கிருேம் என்பதற்குத் தெளிவானவிளக்கம்- ஓட்டில்லை, ஓட்டில்லை தி.மு.க.வுக்கு ஓட்டில்லை!” என்றெல்லாம் ஆயுட் கைதிகளின் ஆட்கள் ஆட்டம் போட்டுத் திரிந்தனர். ஆகாத வேலையென்ருலும் ஆணவக் குரல் தந்தனர்!

“நடிகர்கள் முகத்தைப் பார்க்க வந்தனர். கருத்தைக் கேட்க வரவில்லை. காங்கிரசுக்கு தேர்தல்–தேசபக்தி பரம்பரை உண்டு. அதனல் தட்டிக்கேட்கலாம். ஆகவே ஆதரிக்க வேண்டும்” இப்படியும் சில மூக்கானங்தங்கள் பேசினர்கள். இடைத் தேர்தலில் தங்கள் செயல் சூடு பிடிப்பதாகச் சொன்ன செங்கொடியினர் கடைசியில் சூடு பட்ட பூனைகளாகி விட்டனர்.

கழகம் வென்ற செய்தியைக் கேட்ட பிறகு காங்கிரசுக்காரர்களைக் காட்டிலும் கவலைப்பட்டவர்கள் கழுத்தறுப்பு ஆட்கள் தான்! “ப. உ. ச. தொகுதியில் உங்கள் நிலையென்ன. வலிவென்ன. எந்த ஆதாரத்தில் காமராசருடைய வேட்பாளரைக் காப்பாற்ற உறுதி தருகிறீர்கள்?” என்று தேர்தலுக்கு முன்பே கேட்டோம். இதற்காக கழகத்தவர் பயந்துவிட்டார்கள் என்று பழி தூற்றினர்.

‘தேர்தல் முடிவு’ பற்றி கருத்துரை வழங்கும் சகதிப் பத்திரிகை காங்கிரசைப் பொறுத்தவரை தொகுதியில் பரவலாக வேர்கொள்ளாத நிலை தான் தோல்விக்குக் காரணம் என்று தகவல் தெரிவிக்கிறது. கூலிசரியாகக் கிடைக்காத ஏக்கத்தால் வந்த எரிச்சல் உரையா இப்படிச் சொல்வது?

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் வேலைகளைத் துவக்கியபோது அதைக் கண்டித்தவர்கள் போட்டியிடாத கழுத்தறுப்புக் கட்சியினர். போடிபடிப்பினைகள் தி. மு. க.வுக்கும் உண்டென்று திமிரோடு எழுதிய தண்டாயுதக் கைதி ‘திருவண்ணமலை தமிழக அம்ரோகா’ என்று திருட்டுப் புத்தியைக் காட்டியுள்ளது!

செங்கொடிகள் பவனி வந்து பணியாற்றியபிறகும் மூவர்ணக் கொடிகள் உயரப் பறக்கமுடியாமல் விழுந்தது ஏன்? வாத்தியாராக இருந்து வக்கீலாகியிருக்கும் கலைமன்றத்துத் தொண்டர்கள் முழக்கம் அவர்களுக்கு ஒரு முழக் கயிறைத் தானே வாங்கித் தந்தது! கலைஞர் தந்த பரிசு உயர்ந்தது! ஆயுட் கைதி கூட ஆவலுடன் அதனை ஏற்றுக் கொள்கிருர்.

‘தி.மு.க. எங்களுக்கு ஒரு முழக்கயிறு பரிசளிக்கிறது. 1963ம் ஆண்டில் தமிழகத்தில் இவ்வளவு பிற்போக்கான ஒரு இயக்கம் இருப்பதற்கே நாங்கள் வெட்கித்தலைகுனிய வேண்டியவர்களாகத்தான் இருக்கிருேம். அவர்களுக்கு ஒரு தொகுதியில் வெற்றியென்ருலும் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகவேண்டிய வெட்கக் கேடான விஷயம் தான்”-(ஜனசக்தி 5—7—63)

கழகத்தைப் பிற்போக்கு முகாம் எனப்பல்லிளிக்கும் முற்போக்காளர்களே! உங்கள் தயவிருந்தும்; சூருவளிப்பிரச்சாரத்தில் ‘மாஜி ரயில்வேத் தொழிலாளி’ கேடி ராசுகூட பேசிய பிறகும் ஏன் காளை மாடுகளைக் காப்பாற்ற முடியவில்லை? தூத்துக்குடி ஆட்களில் எத்தனை பேர் மூக்கறுத்துக் கொண்டனர்? ஆயுட் கைதி சொன்னது போல எத்தனை பேர் நாக்கைப் பிடுங்கிக் கொண்டீர்கள்? எவரும் முன்வராவிட்டால், இரண்டு மணி நேரப் பேச்சால் தொகுதி மக்களைத் திருப்பிய தண்டாயுதம் தன் எழுத்தைக் காப்பாற்ற நாக்கைப் பிடுங்கிக் கொள்ள முன்வரட்டும்! நாற்றமெடுத்துவிட்ட கட்சியாவது பிழைத்துக் கொள்ளும்.

திருவண்ணுமலையில் கழகம் தோற்றிருந்தால் அது மரண அடியாகுமாம்! இப்படிச் சொல்கிறவர்களை அரசியல் பைத்தியங்கள் என்ருல் தவருகுமா? தமிழகமெங்கும், வடநாட்டிலும் கூட வெற்றி விழாச் செய்திகள் நிரம்பும்போது, மரண அடி வாங்கியதால் மயக்கம் போட்டிருக்கும் போலீஸ் மந்திரிகள் எவரும் பேசாமல் இருக்கும் போது, அவருடைய கூலியாட்கள் வாயைத் திறக்கலாமா? கொலைகாரர்கள் தூக்குத் தண்டனை பெற்றவர்கள் காங்கிரசை ஆதரித்தால் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்பதை மந்திரி கட்சியினரே இப்போது புரிந்துகொண்டு விட்டார்களே!

“தி.மு க. தோற்றிருந்தால்’ வலிப்பு வந்து எழுதுவதைவிட “எங்கள் ஜீவா மட்டும் உயிரோடு இருந்திருந்தால் இந்தத் தி. மு க வைப் பொடியாக்கியிருப்போம்” என்று பொய்களை எழுதியாவது உங்களது புரட்டு வீரர்களைத் தயார் படுத்துங்கள்! இருபத்திரண்டு மணி நேரத்தில் வன்முறையில் ஆயுட் கைதியும் கேடியும் துவக்கப் போகும் போராட்டத்திற்கு ஆட்களைத்திரட்டுங்கள். ஈரோட்டுப்பையனும், குடிமகனும்தான் தமிழகத்து முற்போக்குச் சக்தியென்ருல், சென்னையில் தொழிலாளர்களை வெள்ளை முதலாளிகளுக்குப் பலியிடத் துடிக்கும் அந்தோணிகளையும் அணைப்பது சரிதானே?

தோணிப் பிள்ளைகள் தொழிலாளிகளைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகள் ஆவதைக் ‘குட்டித் தலைவர்’ தடுக்க முன்வந்தாரா? இந்தப் பிராணிகளை வைத்துக்கொண்டா தி. மு. க.வின் சவாலை சமாளிக்கப்போகிறீர்கள்?

திருவண்ணமலை கழுத்தறுப்புக் கட்சியின் பிரேத மனிதர்களை மிகவும் கலங்கச் செய்துவிட்டது. எனவே வேட்டி சட்டைகளைக் கிழித்துக் கொள்ளத் துவங்கி தெருவிலே ஓடுவதற்கு முன்னல் கழகத்தின் மீது முறைத்துக் கொள்கிருர்கள்.

அமைச்சர்களும், அடியாட்களும், அடிமைகளும், அன்ருடக் கூலிக் கட்சியினரும் கடுமையாக எதிர்த்தபிறகும் கழகம் வென்றது.

கலைஞர் அதனல்தான் குட்டித் தலைவனுக்குஊசியும்நூலும் வாயைத் தைத்துக் கொள்ளப் பரிசாகக் கொடுத்தார். காமராசரின் பங்காளியாகவந்த பாடைதூக்கிகள் மாட்டுப்பிணத்தைப் புதைத்துவிட்டுப் பேசுவதற்கு செய்தி யென்ன இருக்கிறது? வாய்கள் திறக்க வார்த்தைகள் என்ன உள்ளன? தைத்துக் கொள்ளச் சொன்னதிலே தவறென்ன?

சவஞானம் என்ன பேசி கழகத்திற்குப் பாடம் புகட்டப் போகிருர். பதினைந்து வருடங்களாக ஒரு குப்பைத் தொட்டித் தேர்தலிலேகூட போட்டியிட யோக்கியதை அற்றவர்கள் கழகத்தைத் தோற்கடிக்க காங்கிரசுக் கட்சியின் அந்தப் புரத்தில் அரசியல் கற்பை அடகு வைக்க வில்லையா? இந்தக் கேவலத்தைக் காட்டிலும் ஒரு துளி விஷம் குடித்துச் சாவது மேலல்லவா?

தள்ளாத வயதில் தடுமாறும் பெரியாருக்குத் தண்டனை ஒரு ரோசாப்பூ மாலைதான்! காளை மாடுகளுக்கு ‘67 தேர்தல் சில எதிர்க் கட்சி நாற்காலிகளைத் தருமென்று நம்புகிருேம். மீண்டும் மந்திரிகளாக்குவதற்கு எத்தனை மட்டரகமனிதர்கள் முயன்ருலும் முடியப் போவதில்லை!

ஆயுட் கைதிகளை நம்பிய ஆட்சியாளர்கள் முன்னேற்றக் கழகத்தின் முயற்சிகளால் தங்களது ஆணவத்தை இழந்தார்கள்!

இனியும் தேர்தல்கள் வரும்-கழகமும் காங்கிரசும்தான் இரு முகாமிலே இருக்கப் போகின்றன! இடையில் வரும் இடுப்பொடிந்தவர்கள்இன்றும், இனி என்றும் எடுபிடியாட்களே தவிர, ஏற்றம் பெறும் அரசியல் ஆசான்களல்ல! கழகம் வென்றமைக்குக் காளைகளை வீழ்த்திய நல்லவர்களுக்கெல்லாம் எங்கள் நல்வாழ்த்துக்கள்!

—கூடலரசன்



காட்டுமன்னார்கோயில்தொகுதி

எங்கள்

எம். எல். ஏ

# கிருஷ்ணமூர்த்தி

மூன்று பத்துக்கும் குறைந்த வயதினர். அணிவகுப்புகளில் கொடியுயர்த்தி கொள்கை முழக்கம் செய்திட்ட, முட்டம் ஊராட்சியின் தலைவர். பதவிகள் பற்பல அவரைத் தேடி வந்தனவையே. இவர் பதவி தேடிப்போனதாகமாற்ருரும்புகலார். எல்லோரையும்வாஞ்சையுடன் அண்ணன்என்றேஅழைத்திடும் பண்பாளர். முதியவரால் முட்டத்து தம்பியென்றும், இளையவரால் முட்டத்து அண்ணன் என்றும் வாஞ்சையோடு அழைக்கப்படும் பெருமைக்குரியவர். இத்தகு கீர்த்தி பெற்று விளங்குபவர் காட்டுமன்னார் கோயில் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். ஆர். கிருட்டிணமூர்த்தி அவர்களே.

காங்கிரசாருக்கு பலத்த அடி கொடுத்த தொகுதிகளில் ஒன்று கட்டாடுமன்னார்கோயிலெனில் மிகையாகாது. வன்னியர், வன்னியரல்லாதார் எனும் போட்டியில், (52-ல்) வன்னியர்களையே பெருத்த அளவில் கொண்ட இத்தொகுதியில் (அப்போது சிதம்பரம் இரட்டை மெம்பர் தொகுதி) உழைப்பாளர் கட்சியின் இரு பெரும் தலைவர்களில் ஒருவரான திரு. சாமிக்கண்ணு படையாச்சி (முன்னாள் ஆட்சிமன்றத் தலைவர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர். வெற்றி பெற்ருல் அமைசச்ராவேன் எனக் கூறி, தோல்வியை—62-ல் ஜெயங்கொண்டானில் பெருமைக்குரிய திருமதி ஜெகதாம்பாள் வேலாயுதத்திடம் பெற்றவர்) வேட்பாளரானார். திரு. கிருட்டிணமூர்த்திக்கு வெற்றி தேடித் தந்த தற்போதைய வேட்பாளரான திரு. வாகீசம் பிள்ளையே அப்போதும் மஞ்சள் பெட்டியின் வேட்பாளராவார். அப்போது மாநிலமே வியக்குமளவு வெற்றி பெற்ருர் மஞ்சள் பெட்டி திரு. வாகீசம் பிள்ளை. அத்தகு கீர்த்திமிகு வெற்றி கண்டவரே, உதயசூரியனின் செந்நிற பிழம்புக்கு 57-ல் மதிப்பிற்குரிய பொதுக்குழு உறுப்பினர் திரு. பொன். சொக்கலிங்கம் (வட்டத்து பெருமக்களால் சொக்கு அண்ணன் என அழைக்கப்படுபவர்) அவர்களை சொற்ப வாக்குகளில் வெற்றி கண்டவர். தப்பிச் சென்றவர். அந்த ஆணவத்தால் தொகுதி மக்களின் குறைகளைக் களைய, ஆவன செய்யாதிருந்தவர்.

கடந்த தேர்தலில் காட்டு மன்னார்கோயிலில் கழகம் போட்டியிடாது, பொன். சொ.வின் எதிர்ப்பு இருக்காதென நாளேடுகளில் செய்தி கண்ட ஆளும் வர்க்கத்தைச் சார்ந்தோர் கழகத்தவரைக் கண்டு கெக்கல கொட்டினர். பொன். சொ.வின் சுதந்திரா எதிர்ப்பு அறிக்கை கண்டதுமே அஞ்சி நடுங்கினர். உடனே பொன். சொ.வின்மீது குற்றச்சாட்டுகள் பற்பல வாசித்தனர். "கழகத்தைவிட்டே விலகிவிட்டார், திரு. எம். ஆர். கிருட்டிண மூர்த்தியும் விலகிவிட்டார். திருமுட்டம் பகுதியைச் சார்ந்தவர்கள் காங்கிரசாருக்கு— குறிப்பாக சிதம்பரம் வட்டப் பொருளாளர் — திருமுட்டம் பேரூராட்சியின் துணைத்தலைவர் திரு. தட்சிணமூர்த்தி (காங்கிரசின் பாராளுமன்ற, சட்டமன்ற வேட்பாளர்கள் நெருங்கிய உறவினர்), நெடுஞ்சேரி ஊராட்சித் தலைவர் திரு. இராமநாதன் போன்ருேர் ஆதரவு தேடுகின்றனர்" எனகோயபல்ஸ் கொள்கைகளை கட்டவிழ்த்து விட்டனர். ஏனெனில் கடந்த பல தேர்தலில் திருமுட்டம் குறுவட்டம் எதிர்க்கட்சிகளின் கோட்டையாகவே விளங்கி வந்துள்ளது.

சட்டமன்றதுவக்கத்திலேயே, அவரை பெருவாரியாக ஆதரித்து நின்ற திருமுட்டம் பகுதியின் குறைகளை பலப்பல வடிவில் புகன்ருர். பகுதியின் குடிநீர் தேவையையும், விவசாயத் தேவையையும் வலியுறுத்தி உரை நிகழ்த்தினர். மாநகராட்சிக்கு குடிநீர் கொணர, திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதே — வீரநாராயணன் ஏரி (வீராணம்). அது இவரின் தொகுதியைச் சார்ந்ததே. அதை சீர்திருத்தம் செய்ய வேண்டிய அவசியத்தை தக்க சான்றுகளுடன் முதற்கூட்டத் தொடரிலேயே வலியுறுத்தினர். ஏன் இப்போது (63 மார்ச்) நடைபெறற் கூட்டத் திலும் அதை வலியுறுத்தியுள்ளார். வடிகால்களை பழுதுபார்த்து, பயன்பெறச் செய்யுமாறு புகன்றுள்ளார். அவரின் தொகுதியில்—சரிபகுதிக்கு மேல் மின் வசதி ஏற்படுத்துமாறு கண்டனக் குரல் எழுப்பினர். (அருகே நெய்வேலி) தொகுதி மக்களுடன் அவ்வப்போது நேரிலேயும், கிளைக்கழகங்கள் மூலமும், தொகுதிப் பிரமுகர்கள் மூலமும் தொடர்பு கொண்டு ஆக்கப்பணிகளில் முன்னின்று வாதாடுகிருர். அது மட்டுமல்ல காட்டுமன்னார் கோயில் ஊராட்சி ஒன்றிப்பில் அங்கம் வகிப்பதன் மூலம், தொகுதியில் சாலை வசதிகள், மருத்துவ வசதிகள், கல்வியில் முன்னேற்றம் முதலியவற்றில் பெரும் பணி புரிகிருர்.

இவரின் பூரண ஆதரவு பெற்றவரே, ஊராட்சி ஒன்றிப்பின் தலைவராக இருப்பதால். (சிதம்பரம் வட்ட பொருளாளரின் நெருங்கிய உறவினர்) இவரது ஆக்கப்பணிகள் சிறப்புற நடந்தேறி வருகின்றன.

இத்தகு பெருமை கொண்டவரை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தமைக்கு தொகுதி மக்கள் யாவரும் உள்ளபடியே இறும்பூதெய்தியுள்ளனர்;

அன்பன்,

**திருமுட்டம் சீதாராமன்**

---

'தென்னகத் தலைவன்' சார்பாக வாழ்த்துகிருேம்.

## வாழ்க மணமக்கள்

### தில்லை கோவிந்தன்—சுலோசனு

'முரசொலி' அலுவலகத் தோழர் தில்லை கோவிந்தன் அவர்களுக்கும்—வி. எத்திராசலு அவர்களின் புதல்வி சுலோசனுவுக்கும் சிதம்பரம் மாலைக் கட்டித் தெரு சாதுக்கூடம் திருமணமண்டபத்தில் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணத்திற்கு ஏராளமான நண்பர்களிடமிருந்து பரிசுப் பொருள்களும்—வாழ்த்துத் தந்திகளும் வந்திருந்தன.

தேன் தமிழும்—சுவையும் போல மணமக்கள் வாழ்க! வாழ்க!! என வாழ்த்துகிருேம்.

●

குண்டுசி போட்டோகிராபர் சாமுவேல் அவர்களின் இளவல் ராமசே எமர்சன் சாமுவேல் அவர்களுக்கும், பங்கஜத்திற்கும் 4-7-63 அன்று சென்னையில் உள்ள ஆற்காட்லூதர்ன்ஸ் சர்ச்சில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணத்திற்கு ஏராளமான பெரியவர்களும்—நண்பர்களும் வந்திருந்து மணவிழா வினைச் சிறப்பித்தனர்.

மணமக்கள் எல்லா வளமும் பெற்று இனிது வாழ்க! வாழ்க!! எனவாழ்த்துகிருேம்.

●

ஆண்டாவூரணி எஸ். முடியப்பர் அவர்களின் இளவல் ஜேம்ஸ் அவர்களுக்கும்—தினைக்குளம் எம். குழந்தைசாமி அவர்களின் சகோதரி புஷ்பமேரிக்கும் ஆண்டாவூரணி சர்ச்சில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணத்திற்கு ஏராளமான பெரியவர்களும் நண்பர்களும் வந்திருந்து மணவிழாவினைச் சிறப்பித்தனர்.

மணமக்கள் எல்லா வளமும் பெற்று இனிது வாழ்க! வாழ்க!! என வாழ்த்துகிருேம்.

---

### வாழ்க! வாழ்க!

திருவரங்கம்-தென்னகத் தலைவன் விற்பனையாளரும் —உதயசூரியன் படிப்பகச் செயலாளருமான கண்ணுச்சாமி அவர்களின் தங்கை திருமதி சரஸ்வதி அவர்கள் 21-6-63 அன்று திருவரங்கம் அரசாங்கம் மருத்துவமனையில் ஒரு பெண் மகவை ஈன்றெடுத்தார்கள். தாயும் சேயும் நலம்.

செல்வி வாழ்க! வளர்க! என வாழ்த்துகிருேம்.

---

### வாழ்க மணமக்கள்!

தென்கோடிவாக்கம் மாணிக்கம் அவர்களின் குமாரர் கண்ணன் அவர்களுக்கும் திருவல்லிக்கேணி மு. ஆறுமுகம் அவர்களின் செல்வி சரோஜாதேவிக்கும் 8-7-63 அன்று திருவல்லிக்கேணி விநாயகர் திருமண மண்டபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மணமக்கள் இனிது வாழ்க! வாழ்க!! என வாழ்த்துகிருேம்.

## ‘ஓவர்சீய’ருக்கு ஒரு நீதி! மாளவியாவுக்கு ஒரு நீதியா?

கடந்த 15-6-63-ம் நாளிட்ட ‘கரண்ட்’ இதழில் முதல் பக்கம் வெளியான தகவல் ஒன்றை அப்படியே மொழி பெயர்த்துத் தந்திருக்கிறோம்—கீழே!

மாளவியா பதவி துறப்பதற்கு முன்பே இது வெளியாகி யிருக்கிறது என்பதை நினைவில் கொண்டு படியுங்கள்!

படித்துவிட்டு “அதிகாரிகள் எந்தச் சிறு தவறு செய்தாலும் கண்டித்து நடவடிக்கை எடுக்கும் அரசு, அமைச்சர்கள்பால் பரிவு காட்டுவதேன்? புண்ணிய பாவமெல்லாம் பதவி துறத்தல் என்ற நாடகத்தால் போய்விடுமா? இந்நிலை நீடித்தால் நீதி உருப்படுமா?” என்பதற்குப் பதிலளியுங்கள்,

**‘கரண்ட்’ கட்டுரை வருமாறு:**

“புதுதில்லி சூன் 1, 1963 என்று நாளிட்டு இந்திய அரசின் தகவல் துறை வெளியிட்டுள்ள செய்தி ஒன்று, அம்பாலாவில் பணியாற்றி வந்த மத்தியப் பொதுப்பணித் துறை ஓவர்சீயர், அவருக்கெதிராக நடந்த இலாகா விசாரணையின் முடிவாக, ஊழியத்திலிருந்து நீககப்பட்டிருக்கிறார்.

செய்திக் குறிப்பு தெரிவிப்பதாவது: “குறிப்பிடப்பட்ட தரத்திற்குக் குறைவான தரமுடைய செங்கல்லை ஏற்றுக்கொண்டார் ஓவர்சீயர். அத்தோடு பதிலுக்கு இலஞ்சமாக ரூ. 500 பெறுமான வானொலிப் பெட்டி ஒன்றைப் பெற்றுக்கொண்டுள்ளார்.”

செய்திக் குறிப்பு மேலும் தெரிவிப்பதாவது:

“மத்திய உள்துறையமைச்சின் உளவுப்படை அம்பாலாப் பிரிவால் இவ்வழக்குத் துப்புத் துலக்கப்பட்டது.”

இச்செய்திக் குறிப்பின் எண் எஸ்என்ஜே: கேஏசி 40/1-6-3/15-10/பிபிஓய்—539.

அதிகாரியை வேலையிலிருந்து உதறிய அதே அரசின் தலைவர் தலைமையமைச்சர் நேருதான், தனது கூட்டாளி (திரு. கே. டி. மாளவியா) “தேர்தல் காரியங்களுக்காக” செராசுதீன் அன் கோவிடமிருந்து ரூ. பத்தாயிரம் பெறுவதில் தவறேதும் காணவில்லை!


காங்கிரசு அரசால் செய்யப்பட்டிருக்கும் இந்தப் பாரபட்சத்தைக் குறித்து பண்பு வாய்ந்த பம்பாய் காங்கிரசுக்காரர் ஒருவர் ‘கரண்ட்’ ஏட்டுக்குக் கூறியதாவது: இது முற்றிலும் சரியானதே! இற்றைய நாளில், ரூ. 500 (மட்டுமே) பெறுமான வானொலிப் பெட்டியை இலஞ்சமாகப் பெற்றுக்கொள்வது நமது காங்கிரசுக்கு அவமானமானதாகும்,

குறைந்தது ரூ. பத்தாயிரமாகிலும் பெற்றிருந்தால் அது வேறுபட்டதாய் இருக்கும்.”

( 5-ம் பக்கத் தொடர்ச்சி)

றனர். காலரா நோயால் மயங்கித் துவண்டு உயிரற்ற நிலையை அடைந்திருந்த கதாநாயகன் புதைக்கப்பட்டு விடுகிறான். ஆனால் சவப் பெட்டியை உடைத்துக்கொண்டு வெளியே வருகிறான் ஆங்கிலக் கதாநாயகன் பேடியோரோமானி. ஜெயகாந்தன், சுடுகாட்டுக்குப் போனதே இல்லை போலும்—இவருடைய கதாநாயகன் சிவராமன் எரிகின்ற சிதையிலிருந்து எழுந்து விடுகிறான். சுடுகாட்டிலே, பிணம் முறுக்கேறி எழும்போது தடியால் அடிஅடி யென்று அடித்துச் சிதையிலேயே மீண்டும்வீழ்த்தி முழுதும் எரியச்செய்ய வெட்டியான்ஒருவன் எரிகிற சிதையருகில் தடியுடன் நிற்பான்என்கிற சாதாரண உண்மைகூடத் தெரியாமல், கதையிலே குழம்பிக் குப்புற விழுந்திருக்கிறார் ஜெயகாந்தன். சிதையிலிருந்து எழுந்து ஓடுகிற நிலையில் புதுமைக் கதாநாயகன் ஒருவனை ஒரு ஆங்கிலப் பெண் எழுத்தாளரிடம் இருந்து காப்பியடித்துத் தமிழகத்துக்குத் தந்துள்ள ஜெயகாந்தனை எப்படிப் பாராட்டினாலும் தகும்.

ஆம்! தூங்கி விழுகிற பத்திரிகாசிரியர்கள் இருக்கின்றவரை இதெல்லாம் நடந்து கொண்டேதான் இருக்கும். தடுக்க முடியவே முடியாது. உண்மையைக் கூறப் பயப்படுபவர்கள், ஐயோ! இவரைச் சொல்லலாமா? எவ்வளவு அருமையாக எழுதுகிறார்? என்று பேசிக் கொண்டிருப்பவர்கள் இருக்கும்வரை ‘ஜெயகாந்தன்கள்’ மறையப் போவது இல்லை. அவர்கள் காப்பிக்கலையும் நீடிக்கத்தான் போகிறது.



## உயிரே வாழி!

தென்னவர் இதய மாகுந்
தென்னகத் தலைவன் அண்ணா
மன்னவப் பேச்சால் மாற்றார்
மயங்கிடக், கேளா தாரும்
‘என்றுநாம் கேட்போம்’ என்றே
ஏங்கிடப், பேச்சு வல்லார்
‘இன்றுநாம் தோற்றோம்’ என்றே
இரங்கிடச் செய்தான் வாழ்க!

நாட்டானை மொழியைக் காத்து
நலிவுறும் இனத்தார் தம்மின்
கேட்டினைப் போக்கும் எண்ணம்
கிஞ்சிற்றும் இல்லா ராகி
வீட்டினில் துயின்றார் தம்மை
வீரராய் ஆக்கி, நாட்டை
மீட்டிடும் பணியில் நாட்டி
மிளிர்ந்திடச் செய்தான் வாழ்க

எடுத்தனன் கையில் பேனா!
ஈண்டுள மடமை யேகத்
தொடுத்தவன் எழுத்தாம் அம்பை,
தோய்ந்துள அடிமை சாக
விடுத்தனன் நாட்டை மீட்கும்
வேண்டுகோள், மக்கள் நெஞ்சில்
படுத்தனன் உயிராய், தெற்குப்
பரிதியாம் அண்ணா வாழ்க!

சாதிகள் ஒழியப் போலிச்
சமயமுஞ் சாக ஏய்க்கும்
வேதியர் வீழ உண்மை
விதையினை விதைத்துத் தாழ்ந்த
சாதியர் கலைஞர் என்னுந்
தவறுடை எண்ணந் தாழ
ஓதினான் பேச்சால் கற்றோர்க்(கு)
உணர்த்தினான் எழுத்தால் வாழ்க!

கடலிரும் முத்தே! சான்ற
கண்ணிரும் மணியே! தாழை
மடலிரும் மணமே! தாயின்
மனமிரும் அன்பே! நெஞ்சத்
தடமிரும் கலையே! இன்பத்
தமிழிரும் சுவையே! என்றன்
உடலிரும் உயிரே! அண்ணா!
உலகினும் வாழி! வாழி!

இரா. இளவரசு எம். ஏ.

# ?...பதில்!

## வணங்காமுடி பதில் தருகிறார்

கே: திருவண்ணாமலைத் தேர்தல் முடிவுபற்றி பெரியார் மனதிற்குள் என்ன நினைத்துக் கொண்டிருப்பார்?

—அழகர்சாமி
மானாமதுரை

ப: பச்சைத் தமிழர் சரக்கு எடுபடவில்லை; இனி டிரேட் மார்க்கை மாற்றிக்கொள்ள வேண்டியதுதான் என்று திட்டம் போட்டுக் கொண்டிருப்பார்.

கே: 1967-ல் நாம் ஆட்சிக்கு வந்தால் பெரியார் நம்மை ஆதரித்துப் பிரசாரம் செய்வாரா?

—எல். விவேகானந்தன்
சிகப்பிக்குளம்

ப: ஆட்சியிலிருப்போரை ஆதரித்துப் பிரச்சாரம் செய்வதே ஐயாவின் பிறவிக் கடன்! "கண்ணீர்த்துளிப் பசங்க நல்லவனுகதான்—காமராசர் மாதிரி இவனுகளும் பச்சைத் தமிழனுகதான் பொதுஜனங்களே பயப்படாமே அண்ணாதுரைக்கு ஓட்டுப் போடுங்கன்னு"—நிச்சயம் பிரச்சாரம் செய்வார் என்று எதிர்பார்க்கலாம்.

கே: தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தால் பெரியாருக்கு ஏதாவது பதவி கொடுக்கப்படுமா?

—ராஜசேகரன்
மணிமங்கலம்

ப; தி. க. வின் தலைமைப் பதவியைவிட்டு அவர் வேறு எந்தப்பதவிக்கும் வரவே மாட்டார். அதில் உள்ள வருமானத்தைப் போல் ஐயாவுக்கு வேறு எதில் கிடைக்கும். எதிலும் சர்வாதிகாரம்தான் பெரியாருக்கு மெத்தப்பிடிக்கும்—அதற்கு தி. மு. கழக ஆட்சியில் வேலை இல்லையே.

கே: திருவண்ணாமலை துணைத் தேர்தல் முடிவுபற்றி காமராசர் ஏன் வாய்திறக்கவே இல்லை?

—நல்லிஷராப்
காயில்பட்டணம்

ப: கொட்ட வேண்டியதையெல்லாம் திறந்து கொட்டிவிட்டார் திருவண்ணாமலையில்; பாவம் கிடைக்க வேண்டியது கிடைக்கவில்லை. திருவண்ணாமலைத் தேர்தல் முடிவு காமராசருக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்திருக்கிறது. அவர் அதிலிருந்து மீளுவதற்கே நீண்ட நாட்களாகும்.

கே: திருவண்ணாமலையில் காங்கிரஸ் ஜெயித்திருந்தால் காமராசர் என்ன சொல்லியிருப்பார்?

—பரஞ்சோதி
திருவண்ணாமலை

ப: குட்டிக் காங்கிரஸ் தலைவருக்கு நன்றி தெரிவித்திருப்பார். சிறையில் கிடக்கும் சில கம்யூனிஸ்டுகளை விடுதலை செய்திருப்பார். இந்திக்கு எதிர்ப்பே இல்லையென்று டெல்லிப் பட்டணம் வரை சென்று சொல்லித் திரும்பியிருப்பார். திராவிடநாடு விடுதலைப் பிரச்சினையைக் கைவிடுமாறு தி. மு. கழகத்திற்கு அறிவுரை கூறிருப்பார்.

கே: திருவண்ணாமலையில் தி.மு.கழகத்திற்குக் கிடைத்த வெற்றி பிரிவினைக்கு கிடைத்த வெற்றி என்று சொல்வது சரியா?

அ. லெ. கண்ணப்பன்,
பரமக்குடி.

ப: மல்லிகையைப் பறித்துத் தலையில் வைத்துக்கொள்ளுகின்றவர்கள், அழகுக்காக மலரை வைத்துக் கொள்ளுகிறார்கள், அதற்காக அதன் மணத்தை வெறுக்கிறார்கள் என்று கூறமுடியுமா? தி. மு. கழகத்தவரின் ஆற்றலும். செயலும் மலரென்றால் பிரிவினைக் கொள்கை அதன் மணத்தைப் போன்றது.

கே: அண்ணா அவர்களையும் மற்ற தலைவர்களையும் ஐந்தாண்டுகளுக்கு மேல் சிறை வைத்து விட்டால் அடுத்து வரும் பொதுத்தேர்தலில் அவர்கள் எப்படிப் பங்கு பெற முடியும்?

மல்லிகா சுப்பிரமணியன்,
சென்னை-10.

ப: அவர்கள் சிறைக்குள்ளிருந்தபடியே போட்டியிடுவார்கள். நிச்சயம் வெற்றியும் பெறுவார்கள். 1967-ல் மந்திரிசபை அமைக்கும் பொறுப்பை ஏற்க அவர்களை இந்த சர்க்கார் விடுதலை செய்துதான் தீரவேண்டும்.

கே: வெள்ளைக்காரன் வெளியேறி, சுதந்திரம் கிடைத்தால் ராமராஜ்யம் நடைபெறும் என்று கூறினாரேகாந்தி இன்று ராமராஜ்யம் நடைபெறுகிறதா?

கஸ்தூரி பிரசாத்,
சென்னை-24.

ப: ஒரு சலவைத் தொழிலாளி தன் மனைவி மீது மாசு கற்பித்தான் என்பதற்காக சீதையைக் காட்டுக்கு அனுப்பிவைத்து; பழிச்சொல்லிலிருந்து விலகி நின்றான் கதாநாயகன் இராமன். ஆனால் இந்தக் காங்கிரஸ் அரசாங்கத்தின் மீது எத்தனை கறைபடிந்த குற்றச்சாட்டுகள் உண்மையென்று நிரூபிக்கப் பட்டிருக்கின்றன. ஊழல் விவகாரம்; லஞ்சக் குற்றச்சாட்டு,தேர்தலில் மக்கள் புறக்கணிப்பு இத்தனைக்குப் பிறகும் பதவியைவிட்டு விலகமாட்டோம் என்று ஆட்சி பீடத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு கிடக்கும் காங்கிரஸ் கதாநாயகர்களை இராமனுக்கு எப்படிஒப்பிடுவது? ராமராஜ்யம் நடப்பதாக எங்ஙனம் ஏற்றுக்கொள்வது?

### வாழ்க மணமக்கள்

**கா. வேழவேந்தன்—பானுமதி**

தி. மு. க. பொதுக்குழு உறுப்பினர் கே. எம். கண்ணபிரான் அவர்களது புதல்வி பானுமதிக்கும்—தி. மா. மு. கழகத் தோழர் கவிஞர் கா. வேழவேந்தன். பி. ஏ. பி. எல். அவர்களுக்கும் 3-7-63 அன்று சென்னையில் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் திருமண விழா நடைபெற்றது.

மணமக்களை வாழ்த்தி நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் மு. கருணாநிதி, என். வி. நடராசன், சத்தியவாணி முத்து, பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், பேராசிரியர் மயிலை—சிவமுத்து, டாக்டர் மு. வ. அவர்களும் மற்றும் ஏராளமான கழகத் தோழர்களும் வாழ்த்துரை வழங்கினர்.

மணமகன் வேழவேந்தன் நன்றி கூறினர்.

மணமக்கள் தமிழும்—இசையும் போல இனிது வாழ்க! வாழ்க!! என 'தென்னகத் தலைவன்' சார்பாக நாமும் வாழ்த்துகிறோம்.

கே: நாங்குனேரியிலும், போடியிலும் எதிர்க்கட்சிகளை வீழ்த்திவிட்டதாகப் பெருமை பேசிக் கொள்ளும் காமராஜரின் வீரத்தை எதற்கு ஒப்பிடலாம்?

சின்னமுருகன்,
அனகாபுத்தூர்.

ப: மரததிற்குப் பின்னாலே மறைந்து நின்று வாலியைக் கொன்றானே ராமன்; அந்த வஞ்சகத்தனப் போலி வெற்றிக்கு ஒப்பிடலாம். இதைப் பேடித்தனமான வெற்றியென்று ராதா நாடகத்தில் கூறுவார்!

கே: இந்தியக் கம்யூனிஸ்டுகள்-மாஸ்கோவின் உத்திரவுப்படியும்-சீனத்து நடவடிக்கைகளுக்கு ஒப்பவும்தங்கள்கொள்கை அமைத்துக் கொள்வதிலிருந்து விடுபடவே மாட்டார்களா?

ஆறுமுகம், சென்னை.

ப: நாய் வாலை நிமிர்க்கவே முடியாது தோழரே!

கே: இலட்சிய நடிகர் எஸ். எஸ். ஆர். நடத்தும் கழகப் பிரச்சார வில்லுப்பாட்டை எழுதியவர் யார்?

அமிர்தலிங்கம்.
திருச்சி.

ப; கவிஞர் சுப்பு ஆறுமுகம்!

கே; தி. மு. கழகத்திற்கு அமெரிக்காவின் ஆதரவு அதிகமா? நான் இதோடு பத்துக் கேள்வி கேட்டு விட்டேன் ஒன்றுக்குக்கூட பதிலில்லை!

செல்வராஜன்
ஊத்துக்குளி.

ப; இப்படிச் சொத்தையான கேள்விகளையே கேட்டு அஞ்சலட்டைக்கு வீணாக்கிக் கொண்டிருக்கும் காசை தி. மு. கழக தேர்தல் நிதிக்குக் கொடுங்கள்எவ்வளவோ பயனுடையதாக இருக்கும்?

கே: உங்கள் சொந்த ஊர் எது? வயதென்ன?

செல்வராஜன்,
ஊத்துக்குளி.

ப: தமிழ் நாட்டில் அடங்கிய முகவை மாவட்டத்திற்குள்ளிருக்கும் செட்டி நாட்டிற்கு அருகாமையிலுள்ள காரைக்குடிஎனும் ஊருக்குப் பக்கத்திலிருக்கும் தேவகோட்டை என்பதாகும். வயது: இன்னும் 74 ஆண்டுகள் கடந்தால் 100 முடிவடைகிறது.

கே: "கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாகப் பாவித்துத் தன் பொல்லாச்சிறகை ..." இந்தப் பாடலை இப்பொழுது யாருக்கு ஒப்பிடலாம்.

சி. ஆர். நரசிம்மன்
வாணியம்பாடி

ப: சம்பத் நடத்திய விளம்பரப் போராட்டத்தை மனதில் வைத்துக் கொண்டுதானே கேட்கிறீர் இப்படி?

Regd No: M 7640

விலை 16 காசு

கலைச்சோலை

பார்த்த படம்

## ஹரிஹரன் பிலிம்ஸ்

# ஆனந்த ஜோதி

எம். ஜி. ஆர். பல வேடங்களில் தோன்றி ரசிகர்களை மகிழவைக்கும்திரைச் சித்திரம் **ஆனந்த ஜோதி.**

**ஏழ்மையும், சூழ்நிலையும் மனிதனைத் தவறு செய்ய வைக்கிறது! தவறுக்குத் தூண்டுகோலாக அமைகின்றவர்களே சமூகத் துரோகிகள். அந்தச் சமூகத் துரோகியை நிழலாக நம்பி, நடந்து, வளர்ந்து, உயர்ந்தான் ஒரு அப்பாவி.**

குறுக்கு வழியில் குபேரனுகத் துடித்த சமூகத் துரோகி, அந்த் அப்பாவியை அமைதியாக வாழவிடவில்லை. அவனை, அவன் பெண்ணை, அவன் பிள்ளையை அந்தக் குடும்பத்தையே துரோகத்திற்கு இரையாக்க நினைத்தான் வஞ்சகன். முடிவில் வஞ்சகம் தோற்றது! நீ வென்றது!

நல்ல நீதி போதிக்கும் கதை அதைத் துப்பறியும் பாணியில் இழுத்துச் சென்றிருக்கிருர்கள்! கதை சில இடங்களில் விழுந்துஎழுந்தாலும்விறுவிறுப்புக் குறையாமல் ஓடுகிறது,

ஆனந்தாக வரும் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். பிரமாதமாக நடித்துள்ளார்.

மிடுக்கோடு டிரில் மாஸ்டராக வந்து பயிற்சி நடத்தும் போதும், புலவராக வந்து காதலிக்கும் போதும், ஆசிரியராக வந்து குழந்தைகளிடத்தில் அன்பு மழை பொழியும்போதும் கொடுமையை எதிர்த்து தலைமறைவாக வாழும் போதும், பூட்டு வியாபாரியாக வந்து ஆட்டமாடி அமர்க்களப் படுத்தும் போதும், பெரும்வியாபாரியாக முஸ்லிம் வேடத்தில் தோன்றும் கட்டத்திலும் எம். ஜி. ஆர். அருமையாக நடித்துள்ளார்.

சண்டைக் காட்சிகளில்—எல்லாப் படங்களையும் விட இதில் அவர் திறமைக்கு நல்ல வேலை!

தேவிகா—எம். ஜி. ஆருக்கு இணையாக வந்து சிறப்பாக நடித்துள்ளார். சோப்பை முகத்தில் தேய்த்துக் கொண்டு சிணுங்கும் கட்டத்திலும், கை விலங்கோடு காதல் வேடிக்கைகளில் ஈடுபடும் போதும் தேவிகாவின் நடிப்பு அபாரம்.

வில்லனுக வரும் வீரப்பா ஆரம்பக் காட்சியிலேயே 'சபாஷ்' பெறுகிருர்.

சகஸ்ரநாமத்துடன்வியாபார சம்பந்தமாக வாதிடும் கட்டத்திலும், ரகசியக் கடிகாரத்தின் மூலம் தன் ஒற்றர்களிடத்தில் உரையாடும் பொழுதும், எம். ஜி. ஆருடன் மோதிக் கட்டிப் புரளும் காட்சியிலும் சிலிர்க்க வைக்கும்படி நடித்துள்ளார்.

பயந்து பயந்து சாகும் கோழைப் பாத்திரம் சகஸ்ரநாமத்திற்கு-நன்ருகச் செய்திருக்கிருர்.

ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் மட்டும் உண்மை பேச ஆரம்பித்ததிலிருந்து எம், ஆர். ராதா கொட்டகையில் கலகலப் ை, உண்டு பண்ணுகிருர்.

ஒரு தாய் மக்கள், பொய்யிலே பிறந்தபுலவா, நினைக்கத் தெரிந்த மனமே, பனி இல்லாத மார்கழியா ஆகிய பாடல்கள் இனிமையாக உள்ளன. ஆனல் ஓரிரு பாடல்களைத் தவிர மற்றவை மனதில் பதியக் கூடியதாக இல்லை.

சண்டைக் காட்சிகள் சிறந்த முறையில் படமாக்கப்பட்டுள்ளன.

**கதை யோட்டத்தில் சில குறைபாடுகள் இழையோடினுலும் மொத்தத்தில் கண்களுக்கும்—கருத்துக்கும் நல்ல விருந்தளிக்கும் அருமையான பொழுது போக்குச் சித்திரம் ஆனந்தஜோதி.**




ஆசிரியர், வெளியிடுபவர்: ஜி. தினகரன், 31, பார்த்தசாரதிப்பேட்டைத் தெரு, சென்னை-6.
அச்சிடுபவர்: எஸ். சொக்கலிங்கம்,பாரதம் பிரஸ், 14, உஸ்மான் ரோடு, சென்னை-17.